Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நவீன நாகரிக - நங்கையினரின் மனம் நறைந்த
சிறி கருமாரி நகையகம்
நயம் - நாணயம் - உத்தரவாதம்
தற்போது புதுப்பொலிவுடன்
இல.205/6, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் கட்டடத்தில்)
யாழ்ப்பாணம். T.P: 222 5385

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 09 (20.03.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:172

# ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் வாழக் கூடிய நிலையில் இல்லை!

## ஐக்கிய நாடுகள் சபை கூட்டத் தொடரில் மனிதஉரிமை அமைப்பு செயலர் உரை

(ஜெனீவா)

ஐக்கிய இலங்கைக்குள் வாழமுடியும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இல்லை என்று - ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் கலந்துரையாடலின்போது - மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேச நிலையத்தின் பொதுச்செயலாளரான வெரிண விபராப் எடுத்துக் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான 61 ஆவது கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய வெரிண விபராப் உள்நாட்டில் இடம் பெயர்ந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர்.

தமிழ்மக்களின் வாழ்விடங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்களால்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோது சமாதானம் குறித்த எதிர்பார்ப்பு தமிழ்மக்கள் மத்தியில் காணப்பட்டது. ஆனால் தற்போது அந்த எதிர்பார்ப்பு குறைந்துவிட்டது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்ட மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேச நிலையம் இலங்கையின் இன முரண்பாடுகளும் தீர்வுகளும் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (01)



# கனடாவில் புலிகளை தடைசெய்யக் கூடாது!



## பிரதமர் மஹிந்த மற்றும் ரணில் வற்புறுத்து

தமிழீழ விடுதலைப்புலிகளை கனடாவில் தடைசெய்யக்கூடாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் வலியுறுத்தியுள்ளதாக கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர்க்ள் மற்றும் செனட் உறுப்பினர்கள் சார்பில் செனட் சபை உறுப்பினர் டெரக் லீ தெரிவித்தார்.

தனது இலங்கைப்பயண முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் - எமது குழுவினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜே.வி.பியின் முக்கிய உறுப்பினர்களைச் சந்தித்து பேசினார்கள்.

நாட்டின் சமாதான நகர்வில் தமிழீழ விடுதலைப்புலிகள் தற்சமயம் இணைந்துள்ளனர்.

எனவே, அவர்களை கனடா தடை செய்வது பொருத்தமானதல்ல என அவர்கள் விளக்கமளித்தனர்.

இந்த நிலையில் ஜே.வி. பியின் முக்கிய உறுப்பினர்கள் சமஷ்டி தொடர்பாக எந்த ஒரு விளக்கத்தையும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தெரிந்தும் தெரியாதவர்களைப் போல இருந்தார்களா என்பது எமக்குத் தெரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அரசியற் பொறுப்பாளரைச் சந்தித்து அவர்களின் விளக்கத்தையும் தாம் பெற்றுக்கொண்டதாகவும் கனடிய செனட் உறுப்பினர் குறிப்பிட்டார்.

கனடாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்வதா இல்லையா என்பது குறித்த அறிக்கையை தயாரிக்கவே தாம் இலங்கைக்கு விஜயம் செய்ததாக டெரக் லீ கூறினார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் அமைப்பை கனடா தடைசெய்யக் கூடாது என கனடாவில் கலந்துரையாடல்களுக்குச் சென்றுள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பேராசிரியரும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளருமான ரொகான் எதிரிசிங்க தெரிவித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்!

தியாகி தீபம் அன்னைபூபதியின் 17 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது.

மாவீரர் துயிலுமில்லங்கள் அரசியற்துறை அலுவலகங்கள், பொது இடங்களில் அன்னை பூபதியின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலிநிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.குடாநாட்டில் அன்னை பூபதியின் நினைவுதின ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை 9 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகின. தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, அன்னைபூபதியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசியற் துறைச் செயலகம், அரசியற்துறை கோட்ட செயலகங்கள்,வர்த்தகநிலையங்கள் ஆகியவற்றில் நினைவுதினநிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நாவலர் கலாசாரமண்டபத்திலும் அன்னைபூபதியின் நினைவுதின நிகழ்வுகள் நடைபெற்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பல்ரியடிக்கிறதுக்கு அம்மாட்டத்தான் எல்லாரும் படிக்கவேணும்...!

# ஐந்து சதம் கூட கிடைக்கவில்லையென ஜனாதிபதி சந்திரிகா கூறவில்லையாம்!

## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளுக்கென வழங்குவதாக உறுதியளித்த நிதியுதவியில் ஐந்து சதம்கூட தமது கைக்குக் கிடைக்கவில்லை என்று, ஜனாதிபதிசந்திரிகா அண்மையில் கூறியதை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் திரிவுபடுத்தியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

உலகநாடுகள், சர்வதேச அமைப்புகள் உறுதி வழங்கிய நிதியுதவிகள் அரசுக்குக் கிடைக்க வில்லை என்றே ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டதாக,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகளிடம் இருந்து 900 கோடி கிடைத்துள்ளது!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு, வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து இதுவரை 900 கோடி ரூபா அரசுக்குக் கிடைத்திருப்பதாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இதுவரை கிடைக்கப்பெற்ற நிதியில் 120 கோடி ரூபா நேரடியாக அரசின் கணக்குக்குக் கிடைத்துள்ளது. மிகுதி 780 கோடி ரூபா புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழகத்தில் சிறப்புற நடந்த போரும் சமாதானமும் அறிமுகவிழா!



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய "போரும் சமாதானமும்" நூல் அறிமுகவிழா நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

சர்வதேச மாணவர் பேரவையைச் சேர்ந்த புவிராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை துணைவேந்தர் மோகனதாஸ் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வுகளில், வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார் நிகழ்த்தினார்.

வாழ்த்துரையை துணைவேந்தர் மோகனதாஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக அரசறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

UNIT
Whenever you thing about computer products the right place to touch first for Genuine, Technology & Exprienced
Shock to competitors! We achieved a lot from customer via our miracle service & Marvelous technics.
3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்
An Indian Engineer's Centre
எதுவும் கிடைக்கும் (கம்பியூட்டர் சம்பந்தமாக) நல்ல விலையில், சிறந்த தரத்தில், பார் போற்றும் விதத்தில்
நாங்கள் வரண்டியில்லாப் பொருள் எதுவும் விற்பதில்லை
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
Each Computer with finest test-ups & modeled finishing

# போரும் சமாதானமும் நூல் அறிமுக விழாவிலிருந்து!


பொதுச்சுடர் ஏற்றும் துணைவேந்தர்


தேசியக் கொடி ஏற்றும் தங்கன்


அகவணக்கம் செலுத்தும் போராளிகள்



நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்


கலந்துகொண்டோர்







உரைநிகழ்த்தும் பிரமுகர்கள்

## உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாக வலிகாம உதைபந்தாட்ட லீக் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இன்றைய போட்டியில் மாலை3.30 மணிக்கு யங்கென்றீஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணியும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் அணியை எதிர்த்து வலிகாமம் காளியம்பாள் அணியும் மோதவுள்ளது.

## பங்குனி உத்தர பூசை வழிபாடு

அளவெட்டி தெற்கு சிந்நாதவாத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர் வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பங்குனி உத்தர வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெறஇருக்கின்றன.

அன்றையதினம் காலை 10.00 மணிக்கு உத்தர நட்சத்திர பூசை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்று சுவாமி தேவியர் புடைசூழ வீதியுலா எழுந்தருள்வர்.

(206)






## சிறுவிளம்பரம்

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1966 திருவோணம் 2 இல் சூரியன் செவ்வாயுள்ள Chartered Accountant மணமகனுக்கு கொழும்பில் வீடுள்ள படித்த தொழில் புரியாத அழகிய மணமகள் தேவை. வயது 30 இற்குள் இருக்க வேண்டும். தொடர்பு: 222 6366

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1965 நட்சத்திரம் கேட்டை, 12 இல் செவ்வாயுள்ள கொழும்பில் சொந்தத் தொழில் புரிபவருக்கு 1973 இற்கு பின்பு பிறந்த A/L படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். தீவகப் பெண்ணுக்கு முன்னுரிமை தொடர்பு : T.P No. 222 6366. (1098)


ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
லண்டன்
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
(சி-3859)

தேவை

தையல் வேலை தெரிந்த ஆண்கள் உடன் தேவை. மற்றும் தையல் வேலை பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்புகளுக்கு:–
மேவின் தையல் நிலையம்,
இல 28, நவீன சந்தை,
மேல்மாடி, யாழ்ப்பாணம்.
C/3914

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
விஜய், திரிஷா பிரகாஷ்ராஜ் நடித்த ‘கில்லி’ கா.நே(பு.நே) 10.30
ஸ்ரீகாந், பூமிகா நடிக்கும் ரோஜாக் கூட்டம் கா.நே(பு.நே) 2.30 6.30 9.30
21.03.2005 முதல் THE PASSION OF THE CHRIST (யேசுநாதரின் கதை)
(சி-3857)

நிறைஞ்சனாஸ்
விஜய், சங்கவி நடித்த
நிலாவே வா
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-3856)

மனோகரா திரையரங்கு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
மாறுபட்ட வேடங்களில் சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த
மாயாவி
கா.நேரம்: 10.30, 2.30,6.30, 9.30, (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல்
விஜய், ரவிகிருஷ்ணா, நமீஷா, ரம்பா நடித்த
சுக்ரன்
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

புதிய கடைகள்

சகல வசதிகளுடனும் கூடியதாக புதிய கடைகள் கோண்டாவில் பலாலி வீதியில் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:–
திருமதி.நடராசா,
174, பலாலி வீதி, கோண்டாவில்.
1099

காலை 8.00 – 5.00 மணிவரை தொடர்பு கொள்ளவும்

ENGLISH MEDIUM

பாலர் பாடசாலை

புதிய பிரிவுகள் ஆரம்பம்
APRIL 25
புதிதாய் சேரும் மாணவர்களுக்கு APRIL மாதத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
Play Group
Montessori
Pre School
BRITISH BUSINESS SCHOOL
யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். இல:174, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.
HOT LINE : 021-222-5796
British BUSINESS SCHOOL
Where Students Come First

# எஸ்.பி.விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா நல்ல குணத்தை வெளிப்படுத்தவில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜேசேகர

(கொழும்பு)

எஸ்.பி.திஸநாயக்க விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா தமது நல்ல குணாம்சங்களை வெளிப்படுத்தத் தவறிவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் எஸ்.பி.திஸநாயக்க டொட்கொம் என்ற இணையத்தள ஆரம்பநிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஜனாதிபதி தமது கணவரைக் கொலை செய்த ஜே.வி.பியினருடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினார்.

தமது கண் பறிக்கப்பட்டபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த முன்வந்தமை என்பன இதற்கான உதாரணங்களாகும்.

இவ்வாறான குணங்களைக் கொண்ட ஜனாதிபதி, எஸ்.பி.திஸநாயக்கவின் விடுதலை தொடர்பில் மாத்திரம் தமது நல்ல குணாம்சங்களைக் காட்டவில்லை என்பது புதுமையானது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன -

ஜே.வி.பி.யின் பிரதான தலைவர்கள் தொடர்பாக ஜனாதிபதி விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கட்சியின் செயலர் ரில்வின் சில்வாவின் வெலிகம விருந்தகம், பிரசார செயலர் விமல் வீரவன்சவின் மனைவி மேற்கொண்டுவரும் வியாபாரம் மற்றும் நந்தன குணதிலக 200 லட்சம் ரூபா செலவில் அமைத்துவரும் வீடு என்பவை தொடர்பாகவே இந்த விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதன் காரணமாக ஜே.வி.பி. அரசாங்கத்தில் இருந்து விலகிச் செல்லக்கூடிய வாய்ப்பில்லை.

அத்துடன், குற்றம் செய்பவராக இருந்தால் அரசாங்கத்தில் இருக்க வேண்டும். அரசாங்கத்தில் இருந்து வெளியேறினால் குற்றமிழைக்காமல் இருக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் கொள்கையே இதில் பிரதிபலிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ராஜித சேனாரத்னவின் கூற்றுத் தொடர்பாக சட்ட நடவடிக்கைக்குத் தயாராவதாக விமல் வீரவன்ச தெரிவித்தார். (01)

# எஸ்.பியை விடுவிக்கக்கோரி 17 ஆர்ப்பாட்டப் பேரணிகள்!

(கொழும்பு)

சிறையிலுள்ள எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யுமாறுகோரி, நாடுமுழுவதிலும் 17 ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலாவது ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு களுத்துறை நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பதுளை, அநுராதபுரம், குருநாகல், காலி, கேகாலை, மொனராகலை, பொலனறுவ, கம்பஹா, மாத்தறை, இரத்தினபுரி, நுவரெலியா, மாத்தளை, வவுனியா, மட்டக்களப்பு, திருமலை மற்றும் கொழும்பு மாவட்டத்திலும் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.தே. கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இறுதி ஆர்ப்பாட்டம் ஓகஸ்ட் 12 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில்வே நிலையத்துக்கு முன்பாக நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

## ஜனாதிபதி ஆட்சி நீடிப்பு – கருத்துக் கணிப்பு

# இரண்டையுமே ஹெலஉறுமய எதிர்த்துப் போராடுமாம்!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை நீடிப்பது குறித்து கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை மேற்கொள்வதற்கு தாம் ஒருபோதும் ஆதரவை வழங்கப் போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஹெல உறுமயவின் ஊடகப்பேச்சாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க கருத்துத் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கில் சமஷ்டி முறையிலான நிர்வாகத்துக்குத் தாம் சம்மதம் தெரிவிக்க முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

# புதிய ஓய்வூதிய முறைமைக்கு எதிராக கொழும்பில் பேரணி!

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கென அரசு புதிதாக அறிமுகம் செய்துள்ள ஓய்வூதியத் திட்டமுறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

அகில இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனம் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

அரசின் புதிய ஓய்வூதிய முறைமையை நடைமுறைப்படுத்துவதால், ஓய்வூதியர்களின் அதிகபட்ச ஓய்வூதியத்தில் நூற்றுக்கு 20% வீழ்ச்சி அடைந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டியே இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டதாக, அகில இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக ஒன்று திரண்ட அரசாங்க ஊழியர்கள், அங்கிருந்து தாம் போதி விகாரைவரை ஊர்வலமாகச் சென்றனர். பேரணியில் பங்குபற்றிய தொழிற் சங்கப் பிரதிநிதிகள் நிதித்துறைப் பிரதி அமைச்சரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# ஒருங்கமைந்த கட்டமைப்புக்கான நோர்வேயின் ஆலோசனை தயார்!

சுனாமி அனர்த்தத்திற்குள்ளான வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் மறுசீரமைப்புக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பில் அரசும் - விடுதலைப் புலிகளும் ஒருங்கிணைந்து செயற்படும் வேலைத்திட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதிகள் ஐவரையும், முஸ்லிம் பிரதிநிதிகள் மூவரையும், சிங்களப் பிரதிநிதிகள் இருவரையும் நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

நோர்வே அரசினால் தயாரிக்கப்பட்ட இந்த ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் - அந்த நாட்டுக்கு விஜயம் செய்துள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்கத்திடமும் அந்த ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கு நோர்வே அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தில் 30 ஆலோசனைகள் அடங்கியுள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அந்த ஆலோசனைகளில் வடக்கு-கிழக்குப் புனரமைப்பு பணிகளுக்காக வழங்கப்படும் உலகவங்கி உட்பட, சர்வதேச நிதிநிறுவனங்களின் நிதியுதவிகள் நேரடியாக விடுதலைப் புலிகளிடம் வழங்குதல், வெளிநாடுகளிலிருந்து நிவாரணங்களை எடுத்து வரும் விமானங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் செல்வதைத் தடைசெய்தல், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் புனரமைப்புக்குத் தேவையான மனிதாபிமான உதவிகள் மற்றும் உபகரணங்கள் தொழில்நுட்ப வசதிகள் தொடர்பாக வெளிநாடுகளுடன் நேரடியாக கலந்துரையாடுவதற்கு விடுதலைப் புலிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற ஆலோசனைகளும் உள்ளதாக அரசின் நம்பிக்கைக்குரிய செய்திகள் தெரிவிப்பதாகச் சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆகையால் இந்த ஆலோசனைகள் தொடர்பாக அரசு உடன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலுள்ள அனைத்துக் கட்சிகளுடன் கலந்துரையாடி உடன்பாட்டுக்கு வரவேண்டுமென ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்கு அரசின் மூத்த அரசியல்வாதிகள் தீர்மானித்துள்ளனர் என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (தே).



நேற்று முன்தினம் மாலை சூரிச் விமான நிலையத்தை சென்றடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினரை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிற்சர்லாந்துக் கிளைப் பொறுப்பாளர் குலம் அண்ணா, கிளைச் செயற்பாட்டாளர்கள், இளையோர் அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் தமிழீழ மக்கள் எனப் பலரும் பூச்செண்டு கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# கிழக்கு மாகாணம் செல்லவேண்டாமென அமெரிக்கப் பிரஜைகளுக்கு ஆலோசனை!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்துக்கு தமது பிரஜைகள் செல்வதைத் தவிர்க்கும்படி அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் - கிழக்கு மாகாணத்தில் அமெரிக்கப் பிரஜைகள் பணியாற்றுவதையோ, அங்கு பயணம் செய்வதையோ தவிர்க்கும்படி கோரப்பட்டுள்ளது.

கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அரசியல் நெருக்கடிகளை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் நடக்கும் அரசியல் போராட்டங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், மிக அவதானமாகவே செயற்படும்படியும் கோரியுள்ள அமெரிக்கத் தூதரகம் -

இந்தப் பகுதிகளில் அமெரிக்கப் பிரஜைகள் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்தோ பணியாற்றுவதற்குத் தம்மால் சிபார்சு வழங்கமுடியாது எனக் கூறியுள்ளது.

எந்த ஆபத்தான நேரத்திலும் தொடர்புகொள்வதற்கான அவசர தொலைபேசி இலக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

# இனப்பிரச்சினையின் இறுதித்தீர்வு என்ன? தெளிவுபடுத்துமாறு கோருகின்றார் ரணில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்தி, இறுதித் தீர்வு என்ன என்பது குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், தெற்கைப்போன்று வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளை நாடு பிளவுபடாத வகையில் யாப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சிலாபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்டத்தின் செயலணிக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இதைத் தெரிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடைபெறுமானால், மக்களின் சமூக நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 100 கோடி ரூபா விரயமாகும்.

இவ்வாறான பெரும் தொகையைக் கொண்டு, இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதுடன், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் அடுத்தவாரம் சாத்தியமாகுமாம்

## *ஜயந்த தனபால தெரிவிப்பு*

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் சுனாமி உதவிகளை வழங்குவதற்கான பொதுக் கட்டமைப்பை அடுத்தவாரமளவில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

இந்தக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்காக அரசு கடந்த வாரம் இரண்டு ஆலோசனைகளைப் புலிகளுக்குச் சமர்ப்பித்திருந்ததாகவும், அவர்களிடமிருந்து இன்னும் சில தினங்களுக்குள் நல்ல முடிவு கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் கிடைத்தவுடன் இந்தப் புதிய கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.

இந்தப் பொதுக்கூட்டமைப்பு பற்றி அரசும் - புலிகளும் தற்போது கொள்கையளவில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். இதற்கிடையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்புக்கான அனைத்து தயாரிப்பு நடவடிக்கைகளும் முடிவடைந்துவிட்டதாக ரொய்டர் செய்திச் சேவைக்கு வெளிவிவகாரஅமைச்சர் லஸ்மன் கதிர்காமர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# நிதியுதவி குறித்த ஜனாதிபதியின் உரையை ஜி.எல்.பீரிஸ் பெரிதுபடுத்தியுள்ளாராம்

## ஜனாதிபதி செயலகம் அறிக்கை

சர்வதேச சமூகத்தினால், உறுதி வழங்கப்பட்ட சுனாமி அனர்த்த நிதியுதவிகளில் ஒரு சதமேனும் தனது கைக்கு வந்து சேரவில்லையென ஜனாதிபதி அண்மையில் கூறியதை ஐக்கியதேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பெரிதுபடுத்தியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் உறுதி வழங்கிய நிதியுதவிகள் - அரசுக்குக் கிடைக்கவில்லை என, ஜனாதிபதி குறிப்பிட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்துக்கும், பிரதமர் நிதியத்துக்குமான நிதியுதவிகள் மட்டுமே கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிதியுதவிகள் தொடர்பான விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் கிடைக்கும் உதவிகள் பகிரங்கப்படுத்தப்படும்.

உறுதி வழங்கப்பட்டுள்ள உலக நாடுகளின் நிதியுதவிகள் சுனாமி புனரமைப்புக்காகவும், அபிவிருத்திக்காகவும் மட்டுமே பயன்படுத்தப்படுமென ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குக் கேள்விப்பத்திரம் கோருதல், ஒப்பந்தகாரர்களைத் தெரிவுசெய்தல் போன்றவற்றுக்கான பொறுப்பு உறுதி வழங்கியுள்ள நாடுகளுக்கும், அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் திட்டங்களுக்கு அமைய குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உலக நாடுகளின் அரசுகள் வாக்குறுதி வழங்கியுள்ளன.

மேலும் அவற்றைக் கண்காணிப்பது மட்டுமே அரசாங்கத்தின் பணி என, ஜனாதிபதி செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## கொல்கத்தா டெஸ்ட் போட்டி:

# பாகிஸ்தான் வெற்றிபெற 422 ஓட்டங்கள் இலக்கு!



(கொல்கத்தா)


கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாளான இன்று - பாகிஸ்தான் அணி வெற்றி பெற 422 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 3 விக்கெட் இழப்புக்கு 133 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ராவிட் 54 ஓட்டங்களுடனும், கங்கூலி 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று தொடர்ந்து 2ஆவது இனிங்ஸை இந்தியா ஆடியது.

பாகிஸ்தான் வீரர்களின் பந்து வீச்சை ராவிட்டும், கங்கூலியும் தடுத்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். 39.2 ஓவரில் இந்திய அணி 150 ஓட்டங்களைக் கடந்தது.

ஸ்கோர் 154ஆக இருந்தபோது - சமி வீசிய பந்தில் அவரிடமே பிடிகொ




டுத்து கங்கூலி ஆட்டமிழந்தார். அவர் 32 பந்துகளில் 2 பவுண்டரிகள் உட்பட 12 ஓட்டங்களை எடுத்தார். 5ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ராவிட்டுடன் லக்ஷ்மன் ஜோடி சேர்ந்தார்.

அவர் சமி வீசிய பந்தை எதிர்கொண்டபோது- அது எதிர்பாராத விதமாக கண்ணருகில் பட்டது. இதில் லக்ஷ்மன் காயமடைந்தார். தொடர்ந்து ஆடமுடியாததால் அவர் வெளியேறினார். பின்னர் தினேஷ் கார்த்திக், ராவிட்டுடன் இணைந்தார்.

இருவரும் நிதானமாகவும், அதே சமயம் நன்றாக வந்த பந்தை அடித்தும் விளையாடினார்கள். இதனால் இந்தியாவின் ஸ்கோர் சீராக உயர்ந்தது. இந்த ஜோடியைப் பிரிக்க பந்து வீச்சை பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் மாற்றி, மாற்றிப் பார்த்தார். ஆனால் பலனளிக்கவில்லை.

இதனால் இந்தியா 4ஆவது நாள் மதிய உணவு இடைவேளையில் 65 ஓவரில் 215 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ராவிட் 89 ஓட்டங்களும், தினேஷ் கார்த்திக் 31 ஓட்டங்களும் எடுத்திருந்தனர். பின்னர் களமிறங்கிய இருவரும் அடித்து விளையாடினார்கள். இதனால் இந்தியாவின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. சிறப்பாக விளையாடிய ராவிட் 234 ஓட்டங்கள் இருக்கும்போது தனது 20ஆவது டெஸ்ட் சதத்தை அடித்தார்.

அதனைத் தொடர்ந்து தினேஷ் கார்த்திக் தனது முதல் டெஸ்ட் அரைச் சதத்தை அடித்தார். இதனால் இந்தியாவின் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது. இந்தியா 87.3 ஓவரில் 300 ஓட்டங்களைத் தொட்டது. இந்திய அணியின் எண்ணிக்கை 321 ஓட்டங்கள் இருக்கும்போது ராவிட் 135 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரது ஸ்கோரில் 15 பவுண்



டரிகளும், 1 சிக்ஸரும் அடங்கும்.

அடுத்து லக்ஷ்மன் களமிறங்கினார். மறுமுனையில் கார்த்திக் 93 ஓட்டங்கள் எடுத்தநிலையில், கனேரியாவின் பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது இந்திய அணியின் ஸ்கோர் 321 ஆக இருந்தது. அடுத்து 7 ஆவ்து விக்கெட்டுக்கு ஜோடியாக லக்ஷ்மனுடன் பதான் களமிறங்கினார். பதான் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார்.

லக்ஷ்மன் 24 ஓட்டங்களில் கனேரியாவின் பந்தில் ஸ்ரம் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அடுத்து ஹர்பஜன் சிங் களமிறங்கினார். இவர் ஓட்டமெதையும் எடுக்காமல் ரசாக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.


அதனைத் தொடர்ந்து பாலாஜி களமிறங்கினார். இவரும் ஓட்டமெதையும் எடுக்காமல் சர்ச்சைக்குரிய வகையில் ஆட்டமிழந்தார். ஒருமுனையில் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் பதான் சிக்ஸரும், பவுண்டரியுமாக விளாசினார். இதனால் இந்தியாவின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது.

அடுத்து கடைசி விக்கெட்டுக்கு ஜோடியாக பதானுடன் கும்ளே களமிறங்கினார். இருவரும் அடித்து விளையாடினார்கள்.

இந்திய அணி 407 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது தனது அணி டிக்ளேர் செய்வதாக கங்கூலி அறிவித்தார். இதனால் இந்திய அணி இரண்டா வது இனிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 407 ஓட்டங்கள் குவித்தது. பதான் 38 ஓட்டங்களுடனும் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்), கும்ளே 14 ஓட்டங்களுடனும் (3 பவுண்டரிகள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியா முதல் இனிங்ஸில் பாகிஸ்தானைவிட 14 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்தது. இதனால் பாகிஸ்தானுக்கு 422 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

4ஆவது நாள் ஆட்டம் முடிய 20 ஓவர்கள் இருக்கும்நிலையில் இரண்டாவது இனிங்ஸை பாகிஸ்தான்




தொடங்கியது. பாகிஸ்தான் வீரர்கள் தௌபிக் உமர் - அப்ரிடி ஜோடி தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினார்கள். ஒரு முனையில் தௌபிக் உமர் நிதானமாக விளையாடினார்.

மறுமுனையில் அப்ரிடி ஆக்ரோஷமாக அடித்து விளையாடினார். இதனால் பாகிஸ்தான் அணியின் ஸ்கோர் மளமளவென உயர்ந்தது. 9.3 ஓவரில் 50 ஓட்டங்களைத் தொட்டது. சிறப்பாக விளையாடிய அப்ரிடி 50 பந்துகளில் 50 ஓட்டங்களை எடுத்தார். இதில் 9 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் அடங்கும்.

ஆட்டம் முடிய 1.1 ஓவர் மீதமிருக்கையில் கும்ளேயின் பந்தில் அப்ரிடி ஆட்டமிழந்தார். அவர் 59 பந்துகளில் 59 ஓட்டங்களை எடுத்தார். அதில் 9 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கும்.


அடுத்து யுனுஸ்கான் களமிறங்கினார். 4ஆவது நாள் ஆட்டம் முடிவில் பாகிஸ்தான் 20 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டங்களை எடுத்துள்ளது. தௌபிக் உமர் 29 ஓட்டங்களுடனும், யுனுஸ்கான் ஓட்டமெதையும் எடுக்காமலும் களத்தில்




உள்ளனர்.

ஆட்டத்தின் இறுதி நாளான இன்று பாகிஸ்தான் வெற்றிபெற இன்னும் 327 ஓட்டங்கள் எடுக்க வேண்டியுள்ளது. கைவசம் 9 விக் கெட்டுக்கள் உள்ளன.


# வடக்கின் பெரும் போர் சமநிலையில் முடிவுற்றது




ஆட்ட நாயகனும், சிறந்த துடுப்பாட்ட வீரனுமான மயூரதன்



சிறந்த பந்துவீச்சாளன் தயான்



சகலதுறை ஆட்டக்காரர் மதன்ராஜ்



சிறந்த களத்தடுப்பாளன் செல்ரன்

யாழ்.மத்திய கல்லூரிக்கும், யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி 3 விக்கெட் இழப்புக்கு 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சென்.ஜோன்ஸ் கல்லூரி இறுதி நாளான நேற்று தொடர்ந்து ஆடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்கள் மயூரதன் 46, மதன் ராஜ் 23, சகிந்தன் 10, நவகீதன் 17, கிரிஷாந் 8, சஞ்சீவன் 3 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

மத்திய கல்லூரி அணியின் சார்பில் மதுப்பிரியன் 11 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து, 2 விக்கெட்டுக்களையும், வியாசன் 21 ஓவர்கள் பந்துவீசி 56 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பிரசாத் 6.3 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி, 7 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றிருந்தநிலையில் - ஆட்டநேரம் முடிவுற்றதால், போட்டி சமநிலையில் முடிவடைந்தது. மத்திய கல்லூரி வீரர்கள் சுதர்ஷன் 19, நவநீத் 3, வியாசன் 6, றொகான் 28 (ஆட்டமிழக்காமல்), செல்ரன் 14, மகீபன் 1, பிரசாத் 11, மயூரன் 3 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்களைப் பெற்றனர். மத்திய கல்லூரி அணிக்கு உதிரிகளாக 17 ஓட்டங்களை சென்.ஜோன்ஸ் கல்லூரியினர் விட்டுக் கொடுத்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் சஞ்சீவன் 16 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், நிரூபன் 15 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், மயூரதன் 7 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த ஆண்டின் வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்த களத்தடுப்பாளராக மத்திய கல்லூரி வீரர் செல்ரனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர் மயூரதனும், சிறந்த பந்துவீச்சாளராக மத்திய கல்லூரி வீரர் தயானும், சகலதுறை ஆட்டக்காரராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித் தலைவர் மதன் ராஜும், தொடரின் ஆட்டநாயகனாக சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர் மயூரதனும் தெரிவு செய்யப்பட்டனர். (58)

## விளையாட்டு

# நியூஸிலாந்து அணிக்கு எதிராக அவுஸ்ரேலியா 337 ஓட்டங்கள்!



(வெலிங்டன்)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட் இழப்புக்கு 337 ஓட்டங்களைப் பெற்றது.

வெலிங்டனில் நேற்று முன்தினம் இரண்டாவது டெஸ்ட் ஆரம்பமாகவிருந்தபோதும் - மழையால் முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டது. நேற்று நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணித்தலைவர் பிளெமிங் முதலில் அவுஸ்ரேலியாவைத் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதையடுத்து அவுஸ்ரேலிய அணி களமிறங்கி ஆடத் தொடங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட ஜோடியான லாங்கரும் ஹைடனும் நிதானமாக ஆடி 82 ஓட்டங்களை இணைந்து பெற்றனர்.

100 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் - லாங்கர் ஆட்டமிழந்ததையடுத்து பொண்டிங் களமிறங்கினார்.

ஆனால் - அவர் 9 ஓட்டங்களை மட்டுமே பெற்றநிலையில், விற்றோரியின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

ஸ்கோர் 100ஆக இருந்தபோது இரண்டு விக்கெட்டுக்களை இழந்திருந்த அணிக்குப் புத்துயிர் கொடுப்பதாக மார்ட்டின் களமிறங்கினார். ஹைடன் - மார்ட்டின் ஜோடி 45 ஓட்டங்களையே எடுத்தநிலையில், பிரிக்கப்பட்டது.

மூன்றாவது விக்கெட்டாக ஹைடன் ஆட்டமிழந்தார். இவர் 147 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதையடுத்து பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய கிளார்க் 8 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பநேரிட்டது.



இதைத் தொடர்ந்து கடிச் களமி



றங்கி ஆடினார். ஸ்கோர் 247ஆக உயர்ந்தபோது, இவரது விக்கெட் வீழ்த்தப்பட்டது. 63 பந்துகளில் 35 ஓட்டங்களை இவர் பெற்றுக்கொடுத்தார்.


இதையடுத்து மார்ட்டினுடன் கில்கிறிஸ்ட் இணைந்து அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தார். இதனால் அணியின் ஸ்கோரும் வேகமாக உயர்ந்ததுடன் மார்ட்டினும் சதமடித்தார்.

நேற்றைய ஆட்டநேர முடிவில் - அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட் இழப்புக்கு 337 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மார்ட்டின் 182 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டரிகளுடன் 106 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட் 47 பந்துகளில் 7 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 45 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் பிராங்ளின் -2, விற்றோரி -2, அஸ்ரில் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

## சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு முதல் நகர்த்தி 3 நகர்த்தல்களுக்குள் வெள்ளையினை Check mate ஆக்குவதற்கு யாது செய்தல் வேண்டும்? *(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1.. $a_6$ நகர்த்தலுடன் கறுப்பானது காயொன்றினைப் பெறுகின்றது. 2. $Ba_4$ நகர்த்தினால் 2..$b_5$ $Na_5Bxf_3$

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட - மூக்குக்கண்ணாடிகள் தேவையான மாணவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க, தமிழ் மாணவர் ஒன்றியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே, பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் - பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தும் கடிதம், கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம், வைத்திய அதிகாரியின் மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் - எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக இல.155, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (கம்பன் கோட்டம் முன்பாக) நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள தமிழ் மாணவர் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதிய 'சிவஜோதி' நூல் வெளியீட்டு விழா - எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சைவப் புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

# வலுவிழந்தவர்களுக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கல்

சர்வதேச வலுவிழந்தோர் தினமாகிய கடந்த 15 ஆம் திகதியன்று- வலுவிழந்த சிலருக்கு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து முச்சக்கரவண்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அண்மையில் இந்த நிறுவனத்தினூடாக தனிநபர் நன்கொடைத் திட்டத்தினர் பெற்றுக் கொண்ட விண்ணப்பங்களிலிருந்து இந்தத் திட்டத்தால் முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 11 விண்ணப்பதாரிகளுக்கே முச்ளசக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

நிறுவனத் தலைவரும், பணிப்பாளருமான திருமதி தி.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பயனாளிகளுக்கான முச்சக்கரவண்டிகள் முகாமைத்துவ சபையினராலும், இந்த முச்சக்கர வண்டிகளை அன்பளிப்புச் செய்தோராலும் வழங்கப்பட்டன.

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியோரை பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் அகதி முகாம்களில் வசித்து, மீளவும் நாடு திரும்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி புரிந்துவருகிற நிறுவனமாகிய புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனம் ஐ.ஓ.எம். - 2003 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து மீளவும் நாடு திரும்பியவர்களுக்கு, தொழில் சார்ந்த உதவிகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

அந்த வகையில், 2003 ஆம் ஆண்டுப் பகுதியில் நாடு திரும்பியவர்கள் தங்கள் பதிவுகளை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொண்டு, உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனப் புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவன அதிகாரி அறிவித்துள்ளார்.

யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் விமான மூலம் வந்தவர்களும், படகுகள் மூலம் வந்தவர்களும் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமாயின் - தங்கள் பகுதி கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் உறுதிப்படுத்திய கடிதத்துடன், இந்தியாவிலிருந்து மீளத் திரும்பிய திகதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் - இல:38 கோவில் வீதி, யாழ்பாணத்தில் அமைந்துள்ள ஐ.ஓ.எம். அலுவலகத்தில் நேரடியாகப் பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் இவர்களுக்கான தொழில்சார் உபகரணங்களை வழங்குவதுடன், தொடர்ந்து வரும் 6 மாதங்களுக்கு உதவிப் பணமாக 1400 ரூபாவையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டில் மீளத்திரும்பியவர்களுக்கும், 2005 ஆம் ஆண்டு மீளத் திரும்பி வருபவர்களுக்கும் இந்த நிறுவனம் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# வீதி ஒழுங்குகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## போக்குவரத்து பொலிஸார் அறிவிப்பு

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுவதால், அதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். பொலிஸாரின் போக்குவரத்துப் பிரிவினர் வாகன ஒலிபெருக்கியில் தமிழ்மொழிமூலம் வீதி ஒழுங்கு பற்றி அறிவித்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற வீதி விபத்துக்கள், பொது மக்கள், மாணவர்களின் கவனயீனத்தால் ஏற்படுகின்றன.

இதைக் கட்டுப்படுத்தும் முகமாக பாதை ஒழுங்குபற்றி, யாழ். பொலிஸாரின் பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு வாகனமூலம் யாழ். போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி சேனாரத்தின தலைமையிலான குழு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (206)

# அடைக்கல அன்னை ஆலய பரிசுத்தவார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் -ஈழத்துக் கல்வாரியில் பரிசுத்த வாரத்தை முன்னிட்டு, இன்று முதல் 27 ஆம் திகதி உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை வரையான காலப்பகுதியில் விசேட வழிபாட்டு ஒழுங்குகள் பங்குத்தந்தை ம.இ. பயஸ் அடிகளாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இன்று காலை 6.30 மணிக்கு குருத்தோலை பவனியும், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

24 ஆம் திகதி பெரிய வியாழனன்று மாலை 6.30 மணிக்கு புதிய ஏற்பாட்டுத் திருப்பலியும், பாதம் கழுவுதலும், இரவு 11 மணிக்கு திருமணி ஆராதனையும் நடைபெறும்.

25 ஆம் திகதி பெரிய வெள்ளிக்கிழமை - மாலை 5 மணிக்கு திருச் சிலுவை வழிபாடு நடைபெறும்.

26 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 11 மணிக்கு திருவிழிப்பின் பலியும், 27 ஆம் திகதி உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு உயிர்ப்பின் மாபெரும் திருவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன. (206)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : பு.பவதாரணி
முகவரி : 395/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


# சுனாமி அனர்த்த நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி செங்கை ஆழியான் எழுதிய 'சுனாமி அறிவியல்சார் விபரண' நூல் அறிமுகவிழா - நாளை மறுதினம் மாலை 3 மணிக்கு யாழ்.பொதுநூல் நிலைய மண்டபத்தில், யாழ்.பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் அறிமுக விழாவைத் தொடர்ந்து, சுனாமி அனர்த்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் - சுனாமி அனர்த் தம், சுனாமியும் அரசியலும், சுனாமி நிவாரணம், சுனாமியும் சமூகமும், சுனாமியின் பின்னர் மக்கள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையால் உள்ளூராட்சி சபைகளுக்கிடையே 2003 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட செயற்திறன்கள் போட்டியில், வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான பரிசளிப்பு விழா - எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு, யாழ்.பொது நூல்நிலைய மண்டபத்தில் மாநகரசபை ஆணையாளர் க.குணராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி சபைகளில் திறமையான செயற்பாடுகளை மேற்கொண்ட ஊழியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (63)

# நாடக கலைஞர் சுந்தரலிங்கம் நினைவாக அரங்க கருத்தரங்கு

கல்வியாளரும், நாடகக் கலைஞருமான நா.சுந்தரலிங்கத்தின் மறைவை முன்னிட்டு, நாளை மாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் அரங்கக் கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு - 'ஈழத்து நாடக அரங்க மரபில் ந.சுந்தரலிங்கம்' என்ற தலைப்பில் உரைநிகழ்த்தவுள்ளார்.

ஈழத்தமிழ் நாடக அரங்க மரபில் முக்கியமான நாடகாசிரியராகவும், நெறியாளராகவும், நடிகராகவும் திகழ்ந்த நா.சுந்தரலிங்கம் - மார்ச் மாதம் 2 ஆம் திகதி காலமானார்.

இவர் கல்வியதிகாரியாக நீண்ட காலம் கடமையாற்றி, 1998-1999 காலப்பகுதியில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர். தனது 65 ஆவது வயதில் கொழும்பில் காலமான இவர் - நாடகத்துறையில் மிக ஆர்வத்துடன் செயற்பட்டவர்.

இவரது 'அபசுரம்' அபத்தமோடி நாடகம் ஈழத்து தமிழ் நாடகப் படைப்புகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடியது.

ஈழத்து நாடக முன்னோடிகள் பலருடனும், நடிகர் ஒன்றியம், கூத்தாடிகள், நாடக அரங்கக் கல்லூரி போன்ற நாடக நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்றியுள்ளார்.

இலங்கை வானொலியின் நாடகங்கள் பலவற்றில் இவர் பங்கேற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# குருத்தோலை ஞாயிறு

கத்தோலிக்கர்களால் இன்று குருத்தோலை ஞாயிறு கொண்டாடப்படுகிறது. தவக்காலத்தின் ஆறாம் வாரமாகிய இன்று ஆலயங்களில் விசேட ஆராதனை, குருத்தோலைப் பவனி என்பனவும் இடம் பெறும்.

அடுத்து வரும் புனித வாரத்தில் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்ப்பு ஞாயிறு என்பன கொண்டாடப்படும். (55)

# கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா

யாழ்.மாநகர சபையால் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா - எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.


இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் கலந்து கொண்டு, அடிக்கல்லை நாட்டிவைக்கவுள்ளார்.

பலகோடி ரூபா செலவில் முற்ற வெளியரங்கில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கலாசார மண்டபத்தின் ஆரம்பக்கட்ட வேலைகள் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இந்த மண்டபம் விரைவில் கட்டி முடிக்கப்படவிருப்பதாகவும் மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

இதேவேளை, அன்றைய தினம் காக்கைதீவில் உள்ளூர் உரத் தொழிற்சாலைக் கட்டடத்துக்கான அடிக்கல்லும் நாட்டிவைக்கப்படவுள்ளது.

உள்ளூரில் கிடைக்கின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி, இந்தப் பசளை உரம் தயாரிக்கப்படவுள்ளது.

இதுவரைகாலமும் யாழ்.மாநகர சபையால்கழிவுப் பொருட்களை அகற்றுவதிலிருந்து வந்த சிரமங்களைக் குறைப்பதோடு - விரைவாக கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதால், கழிவுப் பொருட்களால் சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற தாக்கம் மிகக் குறைவாகவே இருக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.




நேற்று சிறப்பாக நடைபெற்ற யாழ்ப்பாணம் அன்னை நாகா புட்சிற்றின் 2 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும், வர்த்தகப் பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

# விளையாட்டு அரங்கம்



## பார்த்த ஞாபகம் இல்லையோ..!






## பருவ நாடகம் தொல்லையே..!






## வாழ நினைத்தால் வாழலாம்





# இவன் புதிதாய்ப் பிறப்பான்





# உன் பார்வையை நாம் அறிவோம்



# வானமெல்லாம் விண்மீன்கள்








# தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகளை கனடா நாடாளுமன்ற உறுப்பினர் சந்திப்பு







(கிளிநொச்சி)

கனடாநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகளை கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகத்தில் சந்தித்து, சுனாமி கடல் அனர்த்த பாதிப்புக்கள் தொடர்பாகவும், முதலாம்- இரண்டாம் கட்ட புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் - கடந்த புதன்கிழமை கனடா நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மின்னா தலைமையில் வருகைதந்த தூதுக்குழுவினரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் திரு.லோரன்ஸ் கிறிஸ்ரி தலைமையிலான குழுவினரும் பங்குபற்றினர்.

சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச்சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஒருங்கிணைந்து முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டச் செயற்பாடுகள் தொடர்பாகவும், குறிப்பாக இரண்டாம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் இடைக்கால குடியிருப்புக்கள், மீண்டும் கடலுக்குச் செல்லுதல் போன்ற செயற்திட்டங்கள் பற்றியும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

## மாதர்சங்க கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - சாந்தபுரம் கிராமத்தின் மாதர்சங்கத்தின் செயற்பாடுகளை மேம்படுத்தும் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பெண்கள் தமது கிராமத்தின் தேவைகள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர்.

இதேவேளை மாதர்சங்கத்தின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் புதிய மாதர்சங்கக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சாந்தபுரம் கிராம மகளிர் அளரசியற்துறைப் பொறுப்பாளர் எழில்மதி மற்றும் ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## ஆனையிறவு உப்பள ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தின் விசேட கலந்துரையாடல்

(ஆனையிறவு)

ஆனையிறவு உப்பள ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தின் விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை காலை 8.30 மணிக்கு, பரந்தன் இந்து மகா வித்தியாலய மண்டபத்திலும், எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு அரியாலை வரையறுக்கப்பட்ட லங்கா உப்புக் கூட்டுத்தாபன காரியாலய மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் - ஆனையிறவு உப்பள ஊழியர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக, இலங்கை வர்த்தக தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலதட்டி - தொழில் ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய விடயம் தொடர்பாகவும், அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும் தெரியப்படுத்தப்படவுள்ளது.

ஆனையிறவு உப்பள ஊழியர்கள் அனைவரும் தங்களுடைய ஆவணங்களின் முலப்பிரதி நிழற்பிரதிகளுடன் சமூகமளிக்குமாறு, ஆனையிறவு கிளைச்சங்க செயலர் வே.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (09)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**மார்ச் 20**

1602 : இந்துமா கடற் பகுதியிலுள்ள நாடுகளுடன் வர்த்தகம் செய்யும் நோக்கோடு உருவாக்கப்பட்ட டச்சு - கிழக்கிந்திய கம்பனி, மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள பங்குப் பத்திரங்களை முதன் முதல் வெளியிட்டது.

1727 : நகல் எடுக்கும் இயந்திரத்தை (Duplicating Machine) கண்டு பிடித்த ஜேம்ஸ்வார்ட் -இதனைத் தயாரிப்பதற்காக ஜேம்ஸ்வார்ட் அன் கம்பனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

1782 : அமெரிக்க விடுதலை இயக்கத்தை அழிக்கும் பிரிட்டிஷ் அரசின் கனவு கலைந்த நாள். அமெரிக்க விடுதலைப் போராட்டத்தை அழிக்க - காரன் வாலிஸ் தலைமையில் அனுப்பப்பட்ட 8000 பிரிட்டிஷ் படைகள் சரணடைந்தன.

1800 : அலெக்ஷாண்டா வோல்டா என்பவர் தான் கண்டுபிடித்த மின்கலம் பற்றி அறிவியல் கழ்கமான ரோயல் சொஸைட்டிக்கு கடிதம் மூலம் அறிவித்தார்.

1917 : தனது வர்த்தகக் கப்பல்கள் பலவற்றை ஜேர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் தொடர்ந்தும் தாக்கி அழித்து வருவது காரணமாக, அமெரிக்காவும் முதலாம் உலகப் போரில் ஈடுபட முடிவெடுத்தது.

1917 : ஜேர்மனியின் இரு பீரங்கிப் படகுகளைக் கைப்பற்றிக் கொண்டதோடு, சீனாவும் ஜேர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்து கொண்டது.

1922 : பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக யங் இந்தியா என்ற பத்திரிகையில் நான்கு கட்டுரைகள் எழுதியதற்காக மகாத்மா காந்திக்கு ஆறு ஆண்டுகால சிறைத்தண்டணை விதிக்கப்பட்டு, சிறைக்கனுப்பப்பட்டார்.

1934 : ஜேர்மனியின் கீல் துறைமுகத்தில் ராடரினது செயல் திறன் பற்றிய பரிசோதனை செய்துபார்க்கப்பட்டது.

1956 : டுனிஷியா விடுதலையை பிரான்ஸ் அங்கீகரித்தது.

1957 : சுயெஸ் கால்வாய் தொடர்பாக அமெரிக்காவுக்கும் - பிரிட்டிசுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்ட பெர்முடா மகாநாடு தொடங்கியது.

1999 : நமீபியா சுதந்திரம் அடைந்தது.

தொகுப்பு - சந்துரு

## மீன்பிடிப் படகுகள் திருத்தும் நிலையம் குடத்தனையில் திறந்து வைக்கப்பட்டது

சுனாமி கடற்கொந்தளிப்பில் சேதமடைந்த மீன்பிடிப் படகுகளைத் திருத்தும் நிலையம் புனரமைக்கப்பட்டு, நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு குடத்தனை - பொற்பதி கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிலையம் நோர்வே ஏ.ஜே.பிஸ்சிங் நிறுவன அனுசரணையுடன் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் இ.சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மீன்பிடிப் படகு திருத்தும் நிலையத்தை யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.


இந்த நிகழ்வில் - வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தீபன், வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பன், கடற்புலிகளின் பயிற்சி ஆசிரியர் கிருபா உட்பட - வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதுவரையில் சுனாமி கடல் கொந்தளிப்பால் சேதமடைந்த படகுகளைத் திருத்துவதற்கான நிலையங்கள் யாழ்.மாவட்டத்தில் தும்பளை, மாதகல், பொலிகண்டி ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்பட்டன. இது யாழ்.மாவட்டத்தில் நான்காவது நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட மல்லாவிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் மல்லாவிப் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிமனையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் - பாண்டியன்குளம், மல்லாவி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.




## முல்லைத்தீவு பகுதியில் மீட்கப்பட்ட பொருட்கள் கடற்தொழிலாளர் சமாசத்திடம் ஒப்படைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத்தில் சுனாமி கடல் அனர்த்தம் நிகழ்ந்த பின்னர் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்ட பொருட்கள் - உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவுப் பகுதியில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட மீட்புப் பணியாளர்களாலும், தமிழீழ காவல் துறையினராலும் கண்டெடுக்கப்பட்டு, முல்லைத்தீவு காவல்துறைப் பணிமனையில் பாதுகாக்கப்பட்டு வந்த வெளியிணைப்புப் படகு இயந்திரங்கள், மீன்பிடி வலைகள் போன்றன முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பகுதியில் மீட்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள், முக்கிய ஆவணங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் சில ஆவணங்கள் முல்லைத்தீவு காவல்துறைப் பணிமனையில் உள்ளது. உரியவர்கள், தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத்தில் அன்னை பூபதியின் முதல்நாள் நிகழ்வுகள்

தியாக தீபம் அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவுநாளில் முதல்நாள் நிகழ்வு - நேற்றுக்காலை 9 மணிக்கு காவல்துறை நடுவப் பணியகத்தில், காவல்துறை நடுவப் பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை காவல்துறை தலைமைக் காவலர் ஸ்ரீ கௌரி ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியைக் காவல்துறையின் சிறப்புப்படையணி நிர்வாகப் பொறுப்பாளர் குமணன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாக தீபம் அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகைச்சுடரை கண்காணிப்பாளர் இராமநாதன் ஏற்றி வைக்க, மலர் மாலையை சீர்திருத்தத்துறைப் பொறுப்பாளர் நரேன் அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அகவணக்கம், உறுதியுரை என்பன இடம் பெற்றது. இந்த நிகழ்வில் காவல்துறை கண்காணிப்பாளர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கிளிநொச்சி அரசியற்துறை செயலகத்தில் பொது அமைப்புகளுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகளுக்கான கலந்துயையாடல் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு கிளிநொச்சி அரசியற்துறை செயலகத்தில் - கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவநேசன் தலைமையில் நடை பெற்றது.

இந்தச் சந்திப்பில் அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளும், நாட்டுப்பற்றாளர் நினைவு நாள் தொடர்பாகவும், எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள சங்கம நிகழ்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் தேசிய எழுச்சிப் பேரவை பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகள், பிரதேச அரசியற்துறையினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

திருக்குறள்

## நமது நோக்கு

# சந்திரிகாவின் குத்துக்கரணம்!

சுனாமி நிவாரண நிதிக்கென ஐந்து சதம் கூட வெளி நாடுகளில் இருந்து கிடைக்கவில்லை என்று தங்கா லையில் நடந்த கூட்டமொன்றில் - ஜனாதிபதி சந்திரிகா நிகழ்த்தியிருந்த உரை குறித்து ஜனாதிபதி செயலகம் புதிய விளக்கம் ஒன்றை கொடுத்திருக்கிறது.

ஜப்பான், உலகவங்கி போன்றவற்றிடமிருந்து பெருமளவு நிதியுதவியை பெற்றுக்கொண்ட பின்னரும் ஜனாதிபதி சந்திரிகா, ஐந்து சதம் கூடக் கிடைக்கவில்லை என்று தெரிவித்த கருத்து பலத்த சர்ச்சைகளை உருவாக்கி இருக்கிறது.

ஜப்பான், உலக வங்கி போன்றன மட்டுமின்றி - பிரதியமைச்சர்களின் கூட்டமைப்பும் இதுபற்றி கேள்வி எழுப்பியிருக்கின்றது.

வெளிநாடுகளும், தனது கட்சியின் பிரதியமைச்சர்களும் போர்க்கொடி தூக்கியதாலும் - ஜனாதிபதி செயலகம் மூலம் புதிய விளக்கம் கொடுத்து சமாளிக்க முற்பட்டிருக்கிறார் சந்திரிகா -

நாட்டின் பொறுப்பு வாய்ந்த ஒருவர் என்ற நிலையில் இருந்து அடிக்கடி நிலைதவறுவதில் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு நிகர் அவரே தான். சர்ச்சைக்குரிய கருத்துக்களை பகிரங்கமாக - மேடைகளில் கூறிவிட்டு பின்னர் அதனை மறுப்பது - அதை யாராவது திரித்துக் கூறிவிட்டார்கள் என்று கூறி மழுப்புவது இவருக்கு கைவந்த கலையாகிவிட்டது.

அண்மையில் கூட ஜே.வி.பியினர் விரும்பினால் வெளியே போகட்டும் என்று பகிரங்கமாகமேடையில் விமர்சித்து விட்டு - பின்னர் அது சர்ச்சைகளாகக் கிளம்பியதையடுத்து, தான் அப்படிக் கூறவில்லை என்று மறுத்து, அந்தப் பழியையே ஊடகங்கள் மீது போட்டு விட்டார்.

அந்த வகையில்தான் - தங்காலையில் நடந்த கூட்டத்தில், உலக நாடுகளிடம் இருந்து ஐந்து சதம் கூட சுனாமி நிவாரண நிதிக்கென கிடைக்கவில்லை என்று கூறிவிட்டு - இப்போது ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தான் இதை திரித்திச் சொல்லிவிட்டதாக குற்றஞ்சாட்டியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்பட்ட இந்த அறிக்கை உண்மையானதுதானா என்பதை முதலில் அறிய வேண்டும்.

ஏனெனில், ஜனாதிபதி செயலகம் விடுக்கும் அறிக்கை ஜனாதிபதியின் கருத்தை பிரதிபலிக்காது என்று முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் - ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் கூறியிருந்தது நினைவிருக்கலாம்.

இப்போது சுனாமி நிதி குறித்து நிகழ்த்திய உரையை ஜீ.எல். பீரிஸ் தான் திரித்துக் கூறுவதாக - ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை உத்தியோக பூர்வமானதா எனப்பார்க்க வேண்டும்.

அடுத்து - ஜீ. எல். பீரிஸ் தெரிவித்த கருத்துக்குப் பின்னர் தான் இந்தச் சர்ச்சை கூட கிளம்பியிருக்கிறது என்று எவருமே கருதமுடியாது. ஏனெனில், தங்காலையில் ஜனாதிபதி சந்திரிகா உரைநிகழ்த்திய உடனேயே ஊடகங்கள் அதை வெளியிட்டதும் - உதவிகள் வழங்கிய நாடுகள் இது விடயத்தில் கவனம் செலுத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்படியிருக்க - தான் உருவாக்கிய சர்ச்சையையே பீரிஸின் மீது போட்டுவிட்டு தப்பித்துக் கொள்ள சந்திரிகா எத்தனிக்கிறார் என்பதைத் தவிர வேறெதுவும் இல்லை.

முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிடுவது - ஜனாதிபதி சந்திரிகாவின் வாடிக்கையாகி விட்டது. இன்று அவர் வகிக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கே இது இழுக்கை ஏற்படுத்தும் ஒன்றென்பதை அவர் புரிந்துகொள்ளவில்லை.

எங்கும் எப்படியும் கதைக்கலாம் என்று அவர் கருதியிருந்தமை தப்புக்கணக்காகவே போய்விட்டது.

இதனால் தான், குறுகிய காலத்துக்குள்ளாகவே தான் இப்படித் தெரிவிக்கவில்லை என்று குத்துக் கரணம் அடிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா தமிழர் பிரச்சினை தீர்வு தொடர்பாக அடிக் கும் குத்துக் கரணங்களோடு ஒப்பிடுகையில் இது ஒன்றும் பெரிதான தல்லவே.

## நாடும் நடப்பும்




செய்தி :-
அமெரிக்க இராஜாங்க செயலர் கொண்டோலீசா ரைஸின் தெற்காசிய விஜயம்.

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தமிழின அழிப்புக்கான முயற்சி நாடு முழுவதற்குமே அழிவு!

இலங்கையில் எந்தவகையான தீர்வைக்காண விரும்புகின்றது என்பது குறித்து இந்தியா தனது நிலைப்பாட்டை வெளியிடுவதற்கான தருணம் இது என்று அமைச்சர் கதிர்காமர் இங்கிலாந்தில் நின்று சொல்லியிருக்கிறாரே கவனித்தீரா என்று சொல்லியபடி வந்தார் பரமசிவம்.

பார்த்தேன். கதிர்காமர் இப்படி இந்தியாவுக்குச் சொல்வதன் நோக்கம் எதுவாக இருக்குமென்று நினைக்கிறீர் என்று நான் கேட்டேன்.

சிறிது காலமாகவே இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டுமென்று வற்புறுத்திவரும் கதிர்காமர் இப்போது இந்தியாவை மிரட்டும் தொனியில் பேசுவதாகவும் தெரிகிறது. இந்தியா இலங்கையில் விடுதலைப் புலிகள் சம்பந்தமாகத் தலையிட முன்வராவிட்டால் நாங்கள் வேறு யாருடைய உதவியையாவது தேடவோ நாடவே வேண்டியிருக்கும் என்ற ரீதியில்தான் கதிர்காமர் பேசுவதாகத் தோன்றுகிறது என்றார் பரமசிவம்.

நீங்கள் எங்கள் பிரச்சினையில் புலிகளுக்கு எதிராக ஏதாவது நடவடிக்கைக்கு உதவவேண்டும். இல்லையேல் பாகிஸ்தானிடம் உதவி கேட்போம் என்ற ரீதியில் காய் நகர்த்த கதிர்காமர் முயற்சி செய்தாகத் தோன்றுகிறதே என்றேன்.

சீனாவைப் பலவீனப்படுத்த தாய்வானைப் பயன்படுத்துவது போன்று இந்தியாவைப் பலவீனப்படுத்த இலங்கையின் இனப் பிரச்சினையை வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகள் பயன்படுத்துகின்றன. இந்தச் செயலுக்கு அரசுசார்பற்ற நிறுவனங்களும் ஒருசில ஊடகங்களும் உதவுகின்றன என்று ஜே.வி.பியின் பிரசாரப் பீரங்கி விமல் வீரவன்ச குற்றம்சாட்டியிருக்கிறாரே கவனிக்கவில்லையா? என்று கேட்ட பரமசிவம் இப்போ கதிர்காமரும் வீரவன்சவும் பல விடயங்களில் ஒத்தூதுகிறர்கள் என்றார்.

என் போக்குப்படி நடக்க விருப்பமில்லையென்றால் நீங்கள் வெளியேறலாம் என்று சந்திரிகா அம்மையார் மறைமுகமாக ஜே.வி.பியை மிரட்டுகிறார். கதிர்காமரோ கூட்டாட்சியிலிருந்து ஜே.வி.பி.விலகிப் போய்விடாமல் மறைவிலிருந்து உதவி செய்கிறார் என்றேன்.

கதிர்காமர் இந்தியாவை பல்வேறு கோணங்களில் இலங்கை விவகாரத்துக்குள் இழுத்துவிடுவதற்கு சில காலமாகவே முயற்சி செய்துவருகிறார். இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு ரணில் சுழிபோட்டு வைத்தார். இதைக் கதிர்காமர் தமது சாணக்கியத்துக்கேற்ப திருத்தம் செய்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார். டில்லிக்குச் சென்று பேசினார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கொழும்புக்கு அழைத்தார். எப்படியும் இந்த ஒப்பந்தத்தில் இருநாட்டுத் தலைவர்களும் கையெழுத்திடுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். இந்தமாத இறுதியில் இந்தியப் பிரதமராகப் பதவியேற்றபின் மன்மோகன் சிங் முதலில் விஜயம் செய்யும் நாடு இலங்கையாகத் தானிருக்கும் என்று கருதப்பட்டது. அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கவும் இலங்கை திட்டமிட்டது என்று பரமசிவம் சொன்னார்.

ஆனால் நீர் சொல்கிறபடி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்தமாத இறுதியில் இலங்கைக்கு வரமாட்டாராமே. ஜூலை மாதத்துக்குப் பின்னர்தான் அவரது இலங்கை வருகைக்கான திட்டம் தயாராகுமாம். இந்தியத் தூதரக வட்டாரங்களிலிருந்து செய்தி வெளியாகியிருக்கிறது. இதுமட்டுமல்ல இருநாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் இருநாட்டுப் பாதுகாப்புச் செயலர்களால்தான் கைச்சாத்திடப் படுமென்றும் செய்தி தெரிவிக்கிறது என்றேன்.

எப்படியோ இந்தியாவை இலங்கைப் பிரச்சினையில் மாட்டிவிடுவதற்கு சாம, தண்ட, தான, பேத என்ற நால்வகை யுக்திகளையும் கதிர்காமர் பாவிக்கிறார் என்பது மட்டும் தெளிவு. இங்கிலாந்தில் நின்றுகொண்டு இலங்கையில் பிரச்சினைக்கு என்ன மாதிரியான தீர்வை இந்தியா விரும்புகிறதென்பதை வெளிப்படையாகச் சொல்லவேண்டிய தருணம் இது என்று கதிர்காமர் சொல்வதன் நோக்கம் என்ன? என்றார் பரமசிவம்.

விடுதலைப் புலிகளிடம் விமானப் படை இருப்பது பற்றித்தான் இந்தியாவிடமும் இங்கிலாந்திடமும் கதிர்காமர் பெரிதாக எடுத்துக் கூறி வருகிறார். பயங்கரவாத இயக்கத்திடம் விமானப்படை இருப்பது இந்தப் பிராந்தியத்துக்கே ஆபத்தானது என்று அவர் எச்சரிக்கிறார். விடுதலை என்பது இவருக்குத் தெரியாது. இவர் இது பற்றிச் சொல்லும்போது அவர்கள் ஆபத்தில்லை என்றா சொல்வார்கள். ஆனால் கதிர்காமரின் சாதுரியம் சில இடத்தில் சறுக்குவதற்கும் வாய்ப்பிருக்கிறது. விடுதலைப் புலிகளிடமுள்ள விமானப்படை நடவடிக்கைகளை அறிந்து அவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பாகிஸ்தான் சக்திவாய்ந்த ராடர் கருவிகளை இலங்கைக்கு வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றது. புலிகளின் விமானங்களின் நடவடிக்கைகளைக் கண்டறியும் பாகிஸ்தானின் ராடர் கருவிகள் இந்திய விமானங்களின் நடவடிக்கையைக் கண்காணிக்காமல் விட்டுவிடுமா? பாகிஸ் தானின் ராடர் கருவிகளை இலங்கையில் பொருத்துவதை இந்தியா பார்த்துக்கொண்டு சும்மா இருக்குமா? புலிகளின் நடவடிக்கைகள் என்று இந்தியாவை இலங்கை மிரட்டுவதே இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதைத்தானே! இலங்கையில் என்ன நடந்தாலும் அது தனது பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுமென்றால் இந்தியா மௌனமாக இருக்காது. எனவே பாகிஸ்தானின் ராடர் கருவி இலங்கையில் பொருத்தப் படுவதை இந்தியா அனுமதிக்காது என்றேன்.

இந்தியாவின் பாதுகாப்பை வைத்துத் தானே விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கதிர்காமர் சாதுரியம் காட்டுகிறார் என்றார் பரமசிவம்.

சமஷ்டி பற்றியும் கதிர்காமர் லண்டனில் ஏதோ சொல்லியிருக்கிறார் என்றேன்.

இலங்கையில் என்ன மாதிரியான சமஷ்டி அமைப்பு இருக்க வேண்டுமென்றும் இந்தியா சொல்லவேண்டுமாம். சமஷ்டியை யாரும் திணிக்கவில்லையென்றும் அவர் சொல்கிறார். சமஷ்டியில் பல வடிவங்கள் இருக்கின்றன. இந்தியாவிலும் சமஷ்டி ஆட்சிதான், அமெரிக்காவில், கனடாவில், சுவிற்சர்லாந்தில் என இன்னும் உலகில் பல நாடுகளில் சமஷ்டி ஆட்சி அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கு பிரதேசசபை, மாவட்ட சபை, மாகாண சபை என்ற சில அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கே நாடு பிளவுபட்டுவிடும் என்று சொல்பவர்கள் உருப்படியான சமஷ்டி ஆட்சி அமைப்புக்குச் சம்மதிப்பார்களா? எண்பது வீதமான மக்கள் சமஷ்டி அமைப்பை ஆதரிப்பார்கள் என்று கூறும் சந்திரிகா அம்மையார் பின் எதற்காக இதற்குக் கருத்துக் கணிப்பு நடத்தவேண்டும்? சமஷ்டி ஆட்சி அைப்புக் குரிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கு முன் வரலாமே! என்றார் பரமசிவம்.

சமஷ்டி ஆட்சிமுறையை இலங்கை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் நாங்களும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்றும் கதிர்காமர் சொல்லியி ருக்கிறாரே என்றேன்.

கதிர்காமர் சொல்லும் மக்கள் யார்? சிங்கள அரசியல் தலைவர்கள் நாட்டு மக்கள் என்று சொல்லும்போது சிங்கள மக்களை மட்டுமே கருத்திற்கொண்டுதான் சொல்வது வழக்கம். கதிர்காமரும் சிங்கள மக்களைத்தான் கருத்திற்கொண்டு சொல்லுகிறார். அவர் தமிழர்தானா? ஏனென்றால் 1956-1960, 65, 70ஆம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் இஸ்லாமியர்கள் உட்பட தமிழர் தாயகத்தில் சமஷ்டி ஆட்சி அடிப்படையில் சுய நிர்ணய உரிமை வேண்டும் என்ற கோரிக்கைக்கே வாக்க ளித்திருக்கிறார்கள். தமிழர் தாயக மக்கள் அளித்த ஆணைகள் யாவும் சிங்களப் பெரும்பான்மை ஜனநாயகத்தினால் நிராகரிக்கப்பட்ட பின்னரே 1977ஆம் ஆண்டில் இழந்த தமிழரசை மீண்டும் அமைப்பதற்கு தமிழர் தாயக மக்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு ஆணையிட்டார்கள் என்பது கதிர்காமருக்குத் தெரியாமலிருக்கலாம் அல்லது விளங்காமலிருக்கலாம் என்றார் பரமசிவம்.

எப்படியோ-தமிழ் மக்களின் ஆணையையும் தீர்ப்பையும் சிங்கள பௌத்த மேலாண்மை ஏற்றுக்கொள்ளமாட்டாது என்று கதிர்காமர் சொல்கிறார். ஜே.வி.பியும் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்குத் துணையாக இருக்கிறது. வெளி வல்லரசுகளைக் கொண்டுவந்து தமிழ்த்தாயகத்தை நசுக்கிவிடக் கனவு காண்கின்றனர். முடிவு முழு நாட்டுக்குமே நாசம் என்பதை மறந்துவிடுகிறார்கள் என்றேன். பரமசிவம் தலையாட்டியபடியே எழுந்து சென்றார்.

இறையியல்...

அருட்திரு சா.யோ.கு.ஜெயரஞ்சன்

# குருத்தோலை ஞாயிறு கூறுவது என்ன?



பயண நிகழ்வுகள் பலவகை. தடல்புடலான ஆயத்தத்தில் இடம்பெறும் மங்களகரமான வரவேற்பு நிகழ்வுகள் உண்டு. நெஞ்சில் துயர் சுமந்து, கண்ணீர் பெருக்கோடு வழிநடக்கும் அடக்கச் சடங்குகள் உண்டு. தாக்குதல்களிலிருந்து உயிர்காக்க, உடுத்த உடுப்போடு ஓடித்தப்பும் அவசர பயணமுண்டு. உழைப்பின் களைப்பை அகற்றி ஓய்வாகப் பொழுதைச் செலவிட நாம் அமைக்கும் உல்லாசப் பயணங்களுமுண்டு. சுருங்கக்கூறின், பயணமின்றி வாழ்க்கையில்லை.

எருசலேம் நகர் நோக்கிய இயேசுவின் வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம் மீட்பின் வரலாற்றிலே முக்கியமான மைல்கல். கிறிஸ்து ஆண்டவர் மகிமையின் மன்னராக, தாவீதின் மகனாகக் கழுதைக்குட்டி ஒன்றின் மீதமர்ந்து, மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்துப் புகழ்பாட எருசலேம் நகருக்குள் மாட்சிமையோடு நுழைந்த நிகழ்வைக் கிறிஸ்தவர்கள் நாம் இன்று உணர்வு பூர்வமாக நினைவுகூருகிறோம்.

"தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா" (மத் 21:9; மாற் 11:9; யோவான் 12:13) இந்த நாளில் வாழ்த்தொழியாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்களால் எடுத்துரைக்கப்படும் இந்தப் புகழ்ப்பாவின் முக்கிய பதம் 'ஓசன்னா' என்பதாகும்.

ஓசன்னா என்பது - யூதர்களின் மொழியாகிய எபிரேயத்துக்குச் சொந்தமான ஒரு வார்த்தை. இதனை "ஓசா" என்றும் "னா" என்றும் பிரித்துப் பொருள்காண வேண்டும். "ஓசா" என்றால் 'விடுவியும்', 'காப்பாற்றும்', 'மீட்டருளும்' என்பது "னா" என்றால் 'நாங்கள் மன்றாடுகிறோம்' என்பதும் அர்த்தமாகும்.

எனவே 'ஓசன்னா' என்றால் "நாங்கள் மன்றாடுகிறோம், எங்களை மீட்டருளும்" (திபா 118:25) என்பது பொருள். இயேசு எருசலேமுக்குள் பவனியாக நுழைந்த போது, இந்த வேண்டுதலைக் கூறித்தான் மக்கள் ஆர்ப்பரித்தனர். இயேசு ஓர் அரசருக்குரிய மகிமையையும், மாட்சிமையையும் பெற்றிருக்கிறார் என்ற கருத்தை இந்த வாழ்த்து உணர்த்துகிறது.

இன்றைய குருத்தோலை ஞாயிறு வழிபாட்டோடு, புனித வாரத்துக்குள்ளே நுழையும் நாம்- இந்தவாரம் முழுவதும் எமது சிந்தனை, சொல், செயல், நடத்தையில் தூய்மையானவர்களாக, நேரிய உள்ளத்துடன் கிறிஸ்துவின் பாடுகள், மரணத்தை அதிகளவு எம் சிந்தையிலிருத்தி வாழ அழைக்கப்படுகிறோம். எம்மை எம்மிடமிருந்தும், அயலவர்களிடமிருந்தும், இறைவனிடமிருந்தும் பிரிக்கின்ற, அந்நியப்படுத்துகின்ற பாவப் பழக்கவழக்கங்கள், முறைகேடான உறவுகள், தகாத செயல்கள் போன்றவற்றை எம் நெஞ்சத்தின் நேர்மையிலே, இறைவார்த்தையின் ஒளியிலே ஏற்றுக் கொண்டு, மனம்வருந்தி, திருந்திப் புதிய வாழ்வு வாழும் விருப்போடு நாம் ஒவ்வொருவரும் சுய ஆயவை, தியானத்தை, செபத்தை இவ்வாரத்திலே அதிகமாக முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மத்தேயு நற்செய்தியிலிருந்து இன்று வாசிக்கப்படும் இயேசுவின் திருப்பாடுகள் இந்தப் புனிதவாரம் முழுவதும் எம் இதயத்தில் தங்கியிருந்து எம்மைச் செயற்பட வைக்கட்டும்.

முன்னேறிச் செல்லவேண்டுமாயின், நாம் நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, எம் வாழ்வைச் சீராக்குவது மிகவும் அவசியமானது. தனி மனிதப் புதுப்பித்தலே, சமூகப் புதுப்பித்தலுக்கு அடிப்படை.

நான் என்னை எனது உண்மை நிலைகளில் உள்ளாய்வு செய்து, தியானித்து, செபித்து இயேசு பக்கமாய் முற்றாகத் திரும்பும் போது மட்டுமே எனக்கு வாழ்வுண்டு. விடுதலையுண்டு. எல்லாப் பெயருக்கும் மேலாக உயர்த்தப்பட்ட இயேசுவே எமக்கு மீட்பை வழங்க வல்லவர்.

"ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்; தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக -

'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என எல்லா நாவுமே அறிக்கையிடும்".

(பிலிப் 2:10-11) பல விதமான இழப்பினிலும், வேதனையிலும் பலரில் இன்றும் துன்புற்றுக்கொண்டிருக்கும் இயேசுவின் துயர் களைய, நற்செயல்களில், பரித்தியாக முயற்சிகளில் விரும்பி ஈடுபடுவோம்.

இறையருள் பெறுவோம். ✝

## தவக்கால நற்சிந்தனை

"இவர் உண்மையிலே இறைமகன்" (மத். 27:54)




இன்று ஆண்டவரின் திருப்பாடுகளின் குருத்தோலை ஞாயிறு. பரிசுத்த வாரத்தின் நுழைவாயில் மக்கள் ஓசான்னா பாடி, ஆண்டவரை ஆர்ப்பரிப்புடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றநாள். மக்களுக்காகப் பாடுபடவும், இறக்கவும் தன்னைத்தானே கையளிக்க வந்த நாள். தமது தெய்வீக மகிமை அனைத்தையும் துறந்து, வெறுமையாகி அடிமையின் தன்மை பூண்டு, மனித நிலையில் தோன்றி சிலுவைச்சாவை ஏற்கும் அளவுக்கு இறைவனின் திட்டத்துக்கு தன்னைக் கையளிக்கப் பவனியாகச் சென்ற நாள். பாவப்பிடியிலிருந்து நமக்கு விடுதலை அளித்து நிலை யான பேரின்ப இறையாட்சிக்கு நம்மையெல்லாம் அழைத்துச் செல்ல துன்புறும் இறை ஊழியனாகத் தம்மைக் கையளிக்க ஒப்படைக்கப்பட்ட நாள். இந்த நாளின் முக்கியத்தை, அவசியத்தை இயேசுவுக்காக, இயேசுவில் இயேசுவோடு அவர் பாடுகளைச் சந்திப்போம், சிந்திப்போம். அழிவில்லா ஆனந்தத்தின் அவரோடு என்றும் நிலைத்திருப்போம்.

= மோ.தார்சீசியஸ் =

மொழி பெயர்ப்பு

வல்வையூரான்

# அப்பாவி மக்களின் வாழ்க்கையோடு விளையாடுதல்



வழங்குவதற்கு பொதுக்கட்டமைப்பு தேவைப்படாது என்பதாகும்.

இதிலிருந்து இறுதியாக விளங்குவது- நாடு மீண்டும் யுத்தத்துக்குச் செல்ல வேண்டுமென்பதே



தெரிந்தோ, தெரியாமலோ சுனாமியால் அனர்த்தங்களுக்குள்ளாகிய மக்களது வாழ்க்கையோடு நாள்தோறும் விளையாடுகின்ற இடத்துக்கு ஜே.வி.பி தள்ளப்பட்டுள்ளது.

உதவி வழங்கும் நாடுகள் - இலங்கை அரசுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட உதவிகள் தேவையெனில், ஒருங்கிணைந்த கட்டமைப்பை .ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதெனக் கூறியுள்ளன.

இலங்கைக்கு வந்த ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் - அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும், அழிவுகளுக்குள்ளான வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைப் புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாக அரசும், விடுதலைப் புலிகளும் அடங்கிய ஒருங்கிணைந்த கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதென மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளுக்கும் அவர் இது குறித்து அறிவித்துள்ளார். சிறுவர்களைப் படையில் இணைப்பதும், அனைத்து வன்செயல்களையும் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்குத் திரும்புமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்குப் பயண ஒழுங்குகள் குறித்த சிக்கல்களினாலேயே அவர் இந்தமுறை அங்கு செல்லவில்லை.




அடுத்த தடவை அந்தப் பிரதேசங்களுக்குச் செல்லவுள்ளதாகவும் அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆனால், ஜே.வி.பி ஒருங்கிணைந்த பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்குத் தனது எதிர்ப்பைக் காட்டி வருகிறது. அவ்வாறு பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமாயின், உடனடியாக அரசிலிருந்து வெளியேறப் போவதாகவும் எச்சரித்துள்ளது.

ஜே.வி.பியைக் கவனத்தில் எடுக்காமல் செயற்படுவது அரசுக்கு இயலாத காரியம்.

மறுபுறத்தில் ஒருங்கிணைந்த கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு வசதி ஏற்படவில்லையெனில், அதன் அடுத்த பிரதிபலனாக ஏற்படுவது உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த உதவிகள் எதுவும் நாட்டுக்குக் கிடைக்காமையாகும்.

ஜே.வி.பியின் நிலைப்பாடு வெற்றிபெறுமானால், ஆதரவற்றிருக்கும் மக்களுக்கும், நாட்டுக்கும் கருத்தைத் தெரிவிப்பதாகவே அமையும்.

விடுதலைப்புலிகள் தமது பிரதேசத்தில் இருப்பது யதார்த்தம் என்பதும், போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் அவர்கள் தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளனர். சுனாமி பேரனர்த்தம், இலங்கை அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் சில கடற்கரையோரப் பகுதிகளில் மாத்திரமன்றி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் தாக்கியது.

அனர்த்தங்களுக்குள்ளான அனைவருக்கும் நிவாரணங்கள் வழங்கவேண்டுமெனவும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் ஆதரவற்ற நிலையில் உள்ளவர்களுக்கு உதவி வழங்கும் வகையில் - இலங்கை அரசு, விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டுமெனவும் உதவி வழங்கும் நாடுகள் கூறியுள்ளன.

இந்தக் கட்டமைப்பை ஏற்படுத்தாமல், அந்தப் பகுதிகளில் அனர்த்தங்களுக்குள்ளானவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு மாற்றுவழி இருப்பின், அது என்னவென ஜே.வி.பியினர் நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஆனால், அதற்கு அவர்களுக்குள்ள ஒரே பதில் விடுதலைப் புலிகளை யுத்தம் மூலம் தோற்கடித்து, அவர்களின் நிர்வாகத்தின் கீழுள்ள பிரதேசங்களையும், இலங்கை அரசின் நிர்வாகத்துடன் இணைத்துக் கொள்ளும்போது, உதவிகளை

மக்கள் விடுதலை முன்னணி தெரிந்தோ, தெரியாமலோ நாட்டை கொண்டு சென்றுள்ளது நல்ல இடத்திற்கல்ல. மிகவும் ஆழமான இடத்துக்கே.

அனைத்து தர்க்கரீதியான பிரச்சினைகளுக்கும், முன்பு அனர்த்தங்களுக்குள்ளான மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் கடமையும், பொறுப்பும் நாட்டுக்கு உள்ளது.

உலக மக்கள் உதவிகளை வழங்கியது. அரசுக்கோ, ஜே.வி.பிக்கோ அல்ல. அது ஆதரவற்ற மக்களுக்கு. இந்த உதவியும் - சிங்கள மற்றும் தமிழருக்கோ அல்லது மாகாண மட்டத்தில் தரம் பிரித்தோ அல்ல.

ஆதரவற்ற நிலையிலுள்ள மக்களுக்கு கிடைத்த உதவிகளை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு இடம் வழங்காத கொள்கையை, மக்களை நேசிக்கும் கொள்கை பெற கவனத்தில் எடுக்கமுடியாது.

# அணுவாயுத ஏவுகணை பரிசோதனை

# பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது




(பாகிஸ்தான்)

பாகிஸ்தான் ஷாஹீன் - 11 (Shaheen-11) என்ற ஏவுகணையை செலுத்தி சோதனை நடத்தியதாகவும் இது வெற்றிகரமாக அமைந்ததாகவும் பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் சௌகத் சுல்தான் தெரிவித்தார்.

பரிசோதனை நடத்தப்பட்ட ஷாஹீன் - 11 (Shaheen-11) ஏவுகணை அணு ஆயுதத்தை காவிச் செல்லக் கூடியதுடன் 2000 கிலோ மீற்றர் சென்று இலக்கைத் தாக்கும் திறன் கொண்டது.

ஏவுகணைப் பரிசோதனை எந்த இடத்தில் வைத்து நடத்தப்பட்டதென்பதைத் தெரிவிக்க சௌகத் சுல்தான் மறுத்துவிட்டார். எனினும், இந்த ஏவுகணைப் பரிசோதனை நடத்தப்படுவது குறித்து இந்தியா உட்பட அயல் நாடுகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் இந்த ஏவுகணைப்பரிசோதனை தொடர்பாக இந்தியா உடனடியாக எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோலீசா ரைஸ் பாகிஸ்தானுக்கு வந்துசென்ற இரண்டாவது நாளில் இந்த அணு வாயுத ஏவுகணைப் பரிசோதனையை பாகிஸ்தான் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கைரோஸ் கோப் கருவி மாயம்

# விண்வெளி ஆய்வுகூடத்துக்கு ஆபத்து வரலாமென அச்சம்!

(வொஷிங்ரன்)

விண்வெளி ஆய்வுகூடத்தில் வைக்கப்பட்டிருந்த முக்கியமான கைரோஸ் கோப் என்ற கருவி காணாமற் போயுள்ளதால், விண்வெளி ஆய்வுப் பணிகளில் தடங்கல் ஏற்படுவதுடன், அதற்கு ஆபத்து ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளனவா என்ற அச்சமும் வலுத்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், இங்கிலாந்து உட்பட 16 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளிஆய்வு கூடம் அமைத்து ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றன.

இந்த விண்வெளி ஆய்வுகூடத்திற்கு அவ்வப்போது பல்வேறு நாடுகள் றொக்கட் மூலம் அத்தியாவசியப் பொருட்களையும் கருவிகளையும் அனுப்பிவைப்பதுடன், விண்வெளி வீரர்களையும் அனுப்பிவைக்கின்றன.

இந்தநிலையில் இந்தஆய்வு கூடத்தில் வைக்கப்பட்டிருந்த முக்கியமான கைரோஸ்கோப் கருவி காணாமற்போயுள்ளது. இதனால் விண்வெளி ஆய்வுப் பணிகளில் தடங்கல் ஏற்படுவதுடன் அதற்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது. இதனால் ஆய்வு கூடத்தில் 'சர்க்கியூட் பிரேக்கரை' அமைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

எனினும், விண்ணில் சுற்றிக் கொண்டிருக்கும் ஆய்வுகூடத்தை நிலைநிறுத்தும் பணியில் தற்போது எந்தப்பாதிப்புமில்லையென நாசா விண்வெளி நிறுவனத்தின் நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஆய்வு கூடத்திலிருந்து வீரர்கள் வெளியேசென்று விண்வெளியில் நடந்து பணிகளை மேற்கொள்ளவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் - காணாமற்போன கைரோஸ் கோப்பிலுள்ள சர்க்யூட் பிரேக்கர் மிகவும் முக்கியமானதாகும்.

விண்வெளி ஆய்வு கூடத்தில் மற்றொரு கைரோஸ் கோப் கருவி இருப்பதால் அதனை வைத்து சமாளிக்க முடியுமென நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

எனினும், அதிலும் திடீர் பழுது ஏற்பட்டால் நிலைமை விபரீதமாகி விடுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஏப் 16 ரக விமானங்களை பாகிஸ்தானுக்கு

# வழங்குவது குறித்த உறுதிமொழியை கொண்டோ லீசா அளிக்கவில்லை!



ஏப். 16 ரக விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்குவது குறித்து அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோ லீசா ரைஸ் எவ்வித உறுதிமொழியையும் பாகிஸ்தானுக்கு வழங்க வில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோலீசா ரைஸ் இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஆறு நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தான் சென்ற கொண்டோ லீசா ரைஸ் - அதிபர் முஷாரப்பையும், பிரதமர் சவுகத் அஜீசையும் சந்தித்துப் பேசினார்.

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் அளித்து வரும் ஒத்துழைப்பைப் பாராட்டிப் பேசிய ரைஸ், பாகிஸ்தானுக்கு எப் -16 ரக விமானங்களை வழங்குவது குறித்து எதுவும் பேசவில்லை. கொண்டோலீசா ரைஸின் இந்த நடவடிக்கையால் பாகிஸ்தான் ஏமாற்றம் அடைந்துள்ளதாக அந்நாட்டுப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

ஈரான் உட்பட பல நாடுகளுக்கு பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிப்பதற்கு மறைமுக உதவி செய்ததால் பாகிஸ்தான் மீது அமெரிக்கா அதிருப்தி கொண்டிருப்பதாகவும் இதனால்தான் விமானங்களை வழங்குவது குறித்து வாக்குறுதி வழங்கவில்லையென்று பாகிஸ்தான் பத்திரிகைகள் தெரிவித்தன.




# ஈராக்கில் வீதியோர குண்டுவெடிப்பு 3 பொலிஸார் பலி; ஏழுபேர்காயம்!



ஈராக்கின் வடபகுதிநகரான கிர்குக்கில் வீதியோரமாக இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டதுடன் மேலும் எழுவர் காயமடைந்ததாக ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. நேற்று முன்தினம் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட பொலிஸார் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காகச் சென்ற பொலிஸார் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, றமாடிப் பகுதியில் அமெரிக்க இராணுவ தொடரணி மீது கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் எவராவது கொல்லப்பட்டனரா என்பது குறித்த தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை. இந்தத் தாக்குதல் கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதல் மூலமே நடத்தப்பட்டதாக ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஈராக்கை அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் ஆக்கிரமித்து இன்றுடன் இரண்டு வருடங்கள் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகம் தற்போது ஆபத்தான கட்டத்தில் உள்ளது. எனவே, உலகைக் காப்பாற்ற மனிதத் தன்மையற்றவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களையவே தற்போதைய போர் முன்னெடுக்கப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதியான ஜோர்ஜ் புஷ் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஈராக்கிய ஆக்கிரமிப்பை எதிர்த்து லண்டனில் இன்று ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிவாரிப் பரீட்சை சித்திரை மாத நடுப்பகுதியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் 2001/2002, 2002/2003 கல்வி ஆண்டுகளுக்கான வணிக முதற்தேர்வு பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சையைத் தொடர்ந்து கலைமுதற் தேர்வும் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற கலைமுதல் தேர்வுக்குத் தோற்றிய 1180 பேரில் 254 பேர் சகல பாடங்களிலும் சித்தியடைந்துள்ளதாகவும், 2000 ஆண்டு கலைமானி, 2001 ஆம் ஆண்டு வணிகமானி முடித்தவர்களின் பெயர்ப் பட்டியல் மிக விரைவில் வெளியாகும் எனவும் வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகின் இணைப்பாளர் இராஜேஸ்வரன் தெரிவித்தார். (72)

## நூல்வெளியீடும் விருது வழங்கும் வைபவமும்

(கொக்குவில்)

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக சம்பந்தன் விருது வழங்கல் வைபவமும், இரு நூல்களின் வெளியீடும் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நினைவுரையை ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரம் நிகழ்த்துவார். சம்பந்தனின் துறவு, குமாரசாமி சத்திய பாமாவின் சைவ திருமுறைப் பதப் பொருள் அகராதி ஆகிய நூல்களின் வெளியீட்டுரையை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் கடந்த ஆண்டிற்கான சமபந்தர் விருது பேராசிரியர் சி.மௌனகுருவைக் கௌரவித்து வழங்கப்படவுள்ளது.



## வேலைவாய்ப்புச் செய்திகள்



### புவிச் சரிதவியலாளர்/மொழிபெயர்ப்பாளர்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒப்பந்த அடிப்படையிலான புவிச் சரிதவியலாளர் மீதும் நிரந்தர நியமனம் மற்றும் மொழி பெயர்ப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

புவிச் சரிதவியலாளர் பதவிக்கு - புவிச் சரித்வியலாளர் விசேட பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளையும்,

மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு : தமிழ் மொழியில் (விசேட) பட்டத்துடன் க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலம் மற்றும் தமிழில் திறமைச் சித்தியும், இரண்டு வருட முன்னனுபவத்துடன் மூன்று மொழிகளிலும் மொழி பெயர்க்கும் தேர்ச்சியும் பெற்றிருக்கவேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 45 வயதுக்குக் குறையாத எவரும் 2005.03.30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, த.பெ. இலக்கம் - 14, கல்கிசை என்ற முகவரிக்கு - கடித மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

### நிறைவேற்று அதிகாரி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சேவையில் உள்ள நிதிப் பிரிவு நிறைவேற்றுநர் தர உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமை : முழுத் தகுதி பெற்ற கணக்காளர் நிறுவனம் அல்லது இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் அல்லது முகாமைத்துவப் பட்டயக் கணக்காளர் நிறுவன இறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தவராக உள்ளதுடன் கணினிகளைக் கையாள்வதில் நடைமுறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது பிரமுகர்களின் பெயர், முகவரி என்பனவற்றை குறிப்பிடுவதுடன் 2005.03.22 அன்றோ அதற்கு முன்னரோ - பிரதி பொதுமுகாமையாளர் (நிர்வாகம்) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 109 றொட்டுண்டா டவர், கொழும்பு -03 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

### நகர அபிவிருத்தி அமைச்சில்

நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்கு அவ்வப் பதவிக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைக் கொண்டுள்ள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அபிவிருத்தி உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 24, கல்வித் தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு பட்டத்தைக் கொண்டிருக்கவேண்டும்.

திட்டமிடல் உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 12, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சமூக விஞ்ஞானம், புள்ளி விபரவியல், முகாமைத்துவம், விலை மதிப்பீடு என்பனவற்றில் ஒரு பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை - 4, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தகவல் தொழில்நுட்பம், கணினிப் பொறியியல் என்பவற்றுள் ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சட்ட உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 01, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டமானிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

பொறியியல் உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 01, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இயந்திரப் பொறியியலில் விஞ்ஞானமானிப் பட்டம் ஒன்று பெற்றிருத்தல்.

வரவு செலவுத் திட்ட உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 01, தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவ, வியாபார வர்த்தமானிப் பட்டம் பெற்றிருத்தல்.

வழங்கல் உதவியாளர் : வெற்றிட எண்ணிக்கை 01, கல்வித் தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வியாபாரம், முகாமைத்துவம், வர்த்தக முகாமைத்துவம் என்பவற்றில் பட்டம் பெற்றிருத்தல்.

முகாமைத்துவ உதவியாளர் : வெற்றிட எண்ணிக்கை 04, கணக்கியல் உதவியாளர் வெற்றிட எண்ணிக்கை 02, போக்குவரத்து உதவியாளர் 01, கல்வித் தகைமை : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவ, வியாபார, வர்த்தக பட்டங்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 2005.03.31 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் - செயலாளர், நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சு, 3 ஆவது மாடி செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனாதிபதி நிதியத்தில் பெரும் முறைகேடுகள்!

## பேராசிரியர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியில் பாரிய முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தி உள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிடுகையில் -

1978ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டத்தின்படி இந்த நிதியம் அமைக்கப்பட்டது. இந்த நிதியில் குறிப்பிட்ட நிதியத்தில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து கணக்காய்வாளர் நாயகம் தகவல் வெளியிட்டுள்ளார்.

அபிவிருத்தி சீட்டிழுப்பில் கிடைத்த பத்துலட்சத்து நானூற்றி நாற்பத்து நான்கு ரூபா தொடர்பில் எந்தவித பதிவுகளும் இல்லை.

24 மில்லியன் ரூபாய்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் பதிவில் இடம்பெறவில்லை.

சுமார் 500 மில்லியன் ரூபாய் காணாமல் போயுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறிப்பிட்ட ஜனாதிபதி நிதியத்தைக் கண்காணிக்கும் அதிகாரம் நிறைவேற்று சபை ஒன்றுக்கு சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்தச் சபை 2001ஆம் ஆண்டுக்குப் பின்னர் கூடவில்லை என்றும் ஜீ.எல்.பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

### அரசுக்கு வழங்கிய நிதியுதவி

# விபரங்களை வெளிப்படுத்துமாறு தூதரகங்களிடம் வேண்டுகோள்!

இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி உதவி குறித்து விபரமான தகவல்களை வழங்குமாறு இலங்கையில் செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வெளிநாட்டு தூதரகங்களிடம் கோரியுள்ளது.

ஜனாதிபதி அண்மையில் ஐந்து சதம் கூட வெளிநாடுகளிடம் இருந்து இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படவில்லை என்று கூறிய நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை நிலையை தெளிவுபடுத்துமாறு அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜப்பானைத் தளமாகக் கொண்டு இயங்கும் இனவேறுபாடுகளுக்கான சர்வதேச நிலையம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அந்த நிலையம் வெளிநாட்டு தூதரகங்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் -

உங்களுடைய நாட்டினால் இலங்கை அரசாங்கத்திற்கு அவசர கால உதவிகள் எந்த வகையில் வழங்கப்பட்டன? பணமாகவா அல்லது பொருளாகவா வழங்கப்பட்டன? பணமாக வழங்கப்பட்டால் எவ்வளவு தொகை? எப்போது வழங்கப்பட்டது? ஜனாதிபதி நிலையத்திற்கு உதவி வழங்கினீர்களா? எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

வேறு யாருக்காவது நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் யாருக்கு, எப்போது, எவ்வளவு தொகை வழங்கப்பட்டது? இந்த வினாக்களுக்கு பதில் அளிப்பதன் மூலம் தற்போது எழுந்துள்ள முரண்பாடுகளுக்கு தீர்வைக்காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆளுநரின் மாநாட்டை கூட்டமைப்பு புறக்கணிப்பு

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று மட்டக்களப்பில் ஏற்பாடு செய்திருந்த - சுனாமி நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பான உயர்மட்ட மாநாட்டை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித் தனர்.

கடந்த மாதம் மட்டக்களப்பிற்குப் பயணம் செய்த டிரோன் பெர்னாண்டோ சுனாமி பாதிப்புக்களை நேரில் பார்வையிட்டதோடு, நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் குறித்தும் ஆராய்ந்தார்.

இதில் எற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்று மீண்டும் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த அவர் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட உயர்மட்ட மாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தார்.

இந்த மாநாட்டில், கலந்துகொள்வதற்காக டிரோன் பெர்னாண்டோ, மட்டக்களப்பிற்குச் சென்றிருந்த போதிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. இதனால் ஆளுநர் திணைக்களத் தலைவர்களுடன் மட்டும் ஆலோசனைகளை மேற்கொண்டுவிட்டு திருகோணமலை திரும்பினார்.

# நிவாரணம் வழங்கக் கோரி பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டம்!

(வடமராட்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை வியாபாரி மூலைக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தமக்கு எந்த உதவிப் பொருட்களும் பருத்தித் துறைப் பிரதேச செயலகத்தால் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, நேற்றுக் காலை பருத்தித்துறை பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுனாமி அனர்த்தத்தால் விவசாய நிலப்பரப்புகள் கடல்நீரில் மூழ்கி தரிசாகின. இதனால் பாதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான விவசாயிகள் ஒன்று திரண்டு நேற்று போராட்டத்தில் ஈடுபட்டதோடு, இறுதியில் தம்மை புறக்கணித்தது பற்றி மகஜர் ஒன்றையும் பருத்தித்துறை பிரதேச செயலர் வசந்தகுமாரிடம் கையளித்தனர்.

பாதிக்கப்பட்ட தமக்கு உரிய நிவாரணம் வழங்கப்படாவிடின் பாரிய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் தெரிவித்தனர். (14)

### பல்கலைக்கழகத்தில் ...

வியல்துறை விரிவுரையாளர் கே.ரீ. கணேசலிங்கம், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் ஆய்வுரையை மு.திருநாவுக்கரசு ஆற்றினார்.

நூலின் முதல் பிரதியை யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை தலைவர் பி.வி.சிவநாதன் - அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

சிறப்பு பிரதிகளை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் யோ. கலைவிழி, துணைவேந்தர் மோகனதாஸ், மூத்த உறுப்பினர் பாலகுமாரன், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா மற்றும் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் வழங்கினர்.

நேற்றைய இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், போராளிகள், விரிவுரையாளர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### ஐந்து சதம்கூட...

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிநிதியத்துக்கும் பிரதமர் நிதியத்துக்குமான நிதிஉதவிகள் மட்டுமே கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிதிசம்பந்தமான விபரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டதாகவும், எதிர்வரும் காலங்களில் பகிரங்கப்படுத்தப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளினால் உறுதி வழங்கப்பட்ட நிதிஉதவிகள் சுனாமி அனர்த்தத்துக்கும் அபிவிருத்திக்குமே பயன்படுத்தப்படும்.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கேள்விப்பத்திரம் கோருதல், ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்தல் போன்ற வற்றுக்கான பொறுப்பு உறுதிவழங்கிய நாடுகளுக்கும், அமைப்புக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் திட்டங்களுக்கமைய குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உலக நாடுகளின் அரசுகள் வாக்குறுதிகள் வழங்கியுள்ளன. அவற்றை கண்காணிப்பது மட்டுமே அரசாங்கத்தின் பணி என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# புளொட் உறுப்பினர் தேடப்படுகிறார்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலைய தொழிலாளி ஜெயராஜா ராஜுமீது நேற்றுமுன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக புளொட் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகிறார்.

காயமடைந்த குறிப்பிட்ட நபர் பொலிஸாருக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் தன்னைச் சுட்டவர் புளொட் உறுப்பினர் அலன் என உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இவரது வாக்குமூலத்தையடுத்து புளொட் உறுப்பினரான அலன் என்பவர் தற்போது தலைமறைவாகியுள்ளார். இவரைத் தேடும் நடவடிக்கைகளில் மட்டக்களப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

### கனடாவில்...

துள்ளார்.

யோக் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போது பேராசிரியர் எதிரிசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதன் மூலம் இலங்கையின் நெருக்கடிக்கு தீர்வினை காண முடியும் என்பதை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் விடுதலைப்புலிகளை சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலில் இணைப்பதன் மூலம் கனடாவில் அவர்களை தடைசெய்யும் முயற்சியை கனேடிய அரசாங்கம் கைவிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (01)

### அன்னை...

அன்னைபூபதியின் நினைவுதின நிகழ்வுகள் அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இறுதி இரண்டு தினங்களிலும் கோட்ட ரீதியாக உண்ணாவிரத நிகழ்வுகள், பொதுநிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. இறுதி நாள் நல்லூர் ஆலய முன்றலில் மாபெரும் உண்ணாவிரத நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அத்துடன் சிரமதான நிகழ்வுகளும், கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை திருகோண மலை ஆகியமாவட்டங்களிலும் நினைவுதின நிகழ்வுகள் உணர்பூர்வமாக ஆரம்பமானது.

### வெளிநாடுகளிடம்...

கப் பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குக் கிடைத்துள்ளது.

பொது அபிவிருத்தித் திட்டங்களுக்கு 15000 கோடி ரூபா அளவில் தேவைப் படுவதாக அரசு மதிப்பீடு செய்துள்ளது.

அந்தத் திட்டங்கள், அபிவிருத்திப் பணிகள் அந்தந்த நாடுகளாலும், அமைப்புகளாலும் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆசிரியர்களுக்கு

# ஐந்து ஆண்டுகளுக்கு சம்பள உயர்வு இல்லை

சேவையிலுள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஆசிரியர்களுக்கு 2000 ஆம் ஆண்டு தொடக்கம், 2005ஆம் ஆண்டுவரையான ஐந்து வருடங்களுக்கு பதவி உயர்வுக்கான சம்பள உயர்வை வழங்காமல் இருப்பதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் செயற்படுத்தப்படவில்லை. 2005ஆம் ஆண்டு ஜனவரி முதல் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு அனுமதி கிடைத்தாலும், ஆசிரியர்களுக்கு 2000 இலிருந்து 2005 வரையான காலப்பகுதிகளுக்கு பதவி உயர்வுக்கான சம்பளங்களை வழங்காமல் விடுவதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (தே)

# நகைக் கடையை உடைத்து 400 பவுண் நகைகள் திருட்டு

## நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடி நகர்ப் பகுதியில் நகைக் கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து 400 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி - வதிரி சந்தி வீதியில் அமைந்துள்ள பவானி நகை மாடமே உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை உரிமையாளர் கடையை திறந்தபோது இந்த அதிர்ச்சிச் சம்பவம் தெரியவந்துள்ளது.

கடையின் பின்புறமாக இருந்த மதிலின் மேலாக கடையின் கூரையின் மேல் ஏறி சீற் உடைத்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கு அலுமாரியினுள் வைத்திருந்த நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் பாவித்த டோச் லைட் கடையின் கூரை மேலிருந்து பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து கரவெட்டி அரசியல் துறை அலுவலகம், வர்த்தகர் சங்க பாதுகாப்பு குழு ஆகியோரிடமும் முறையிடப்பட்டுள்ளது. (12)

# மன்மோகன்சிங்கின் விஜயம் ஜூலைக்குப்பின் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இந்த மாத இறுதியில் இடம்பெற ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் இலங்கைக்கான விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் விஜயம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் இலங்கை அரசாங்கத்துக்கு விரைவில் அறிவிக்கப்படுமென இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

17 வருடங்களின் பின்னர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வருவதற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தீர்மானித்திருந்தார்.

எனினும் இந்த மாத இறுதியில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்பட்ட இந்தியப் பிரதமரின் விஜயம் எதிர்வரும் ஜலை மாதத்தின் பின்னர் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட முக்கிய உடன்படிக்கையில் இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட விருந்தது.

இந்த நிலையில் அவற்றைத் தயாரிப்பதற்கு வேண்டிய கால அவகாசம் வழங்குவதற்காகவே இந்தியப் பிரதமரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 - 05 - 1983



ஆண்டவன் அடியில் 20 - 03 - 2004

அமரர் **கந்தசாமி சரவணபவன்**

(26ஆம் அணி மருத்துவபீட மாணவன்)

நண்பா!
எம்மை விட்டகன்றதாய் ஓர் பகல்.
கனவு கண்டோம் - அதற்கு
ஆயுசு ஒரு வருஷமாம்...
நனைந்த விழிகள் காயுமுன்
மீண்டுமொருமுறை சிரித்த - உன்
திருமுகத்திற்கு பூத்தூவுகின்றோம்
பகல் கனவு பலிக்காது என்றெண்ணி...

25ம், 26ம் அணி, மருத்துவபீடம்,
யாழ்ப்பாணம்.

(1100)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.